ISSN: 2012 - 6352

# தொண்டன்

40/=

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி

ஜூன் - 2014




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொனி

**ஜூன் - 2014**

மலர் - 46 இதழ் - 05

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் – 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.

## உள்ளே




அன்புடன் உங்களோடு ........ 01
நற்கருணை இயேசுவின் ........ 02
மகிமைமிகு லூர்து நகர் ........ 03
தீர்க்கதரிசனங்களின் நிலம் ........ 05
எண்ணிப்பார்க்கையில் ........ 07
இலக்கிய மஞ்சரி ........ 08
மரணச் சடங்கு மான்மியம் ........ 09
பொறுத்தருள்வாய் ........ 10
மாணவர் பக்கம் ........ 11
ஆழ்ந்த இறைநம்பிக்கையை ........ 12
எதிரிதான் ........ 14
இலக்கிய வீதி ........ 15
தொகைநிலைப் பெயர்கள் ........ 16
வீட்டு மருத்துவம் ........ 18
குருத்துவ வாழ்வில் வெள்ளி ........ 19
அமைதியான வாழ்வு ........ 20
ஊருக்குப் போயிருந்தேன் ........ 21
மனித உரிமைகள் ஆண்டு ........ 22
புனிதர்களை அறிவோம் ........ 25
தங்கத் தமிழ் ........ 26
விவிலியம் கற்போம் ........ 27
அறிவை வளர்ப்போம் ........ 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...!

உறவுக்கு இன்றியமையாதது உடனிருப்பு. நாம் நம்மை அன்பு செய்கின்றவர்களுக்கு அருகில் இருக்க விரும்புகின்றோம். அவர்களைச் சந்தித்து அவர்களுடன் இருந்து, உண்டு, அந்த உறவை ஆழப்படுத்த விரும்புகின்றோம். அவர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு மடல்களின் ஊடாகவோ, தொலைபேசியூடாகவோ தொடர்பை ஏற்படுத்தி நம் அன்பு நினைவுகளாலும் அக்கறையாலும் நம் இதயத்தில் அவர்கள் இருக்கின்றார்கள் என்பதையும் உடனிருப்பையும் உணர்கின்றோம். இத்தகைய உடனிருப்பு இல்லையென்றால் எந்த உறவோ நட்போ அதிக நாள்கள் நீடிப்பதில்லை.

உடனிருப்பு என்பது ஈர் உயிர்கள் அன்புகொண்டு ஒன்றுக்கொன்று அருகில் இருப்பது, ஒன்றையொன்று தொட்டு இணைந்திருப்பது. அது உடல்களின் அருகிருப்பு மட்டுமன்று மாறாக, உள்ளங்களின் சந்திப்பு, உயிர்களின் தொடர்பு. தானே தனக்குப் போதும் எனும் தன்னிறைவை விடுத்து, ஓர் இதயம் இன்னோர் இதயத்தைத் தேடி வருவதும் அதன் இன்ப துன்பங்களையும், வெற்றி தோல்விகளையும் சுகங்கள் தோல்விகளையும் பகிர்ந்து அவற்றின் பாதிப்புகளுக்குத் தன்னையும் ஆளாக்குகின்ற உடனிருப்பு. உண்மையான உடனிருப்பில் ஒருவர் தனது தனித்தன்மையை இழப்பதில்லை. அடுத்தவரது தனித்தன்மையையும் அழிப்பதுமில்லை. மாறாக, உயிரூட்டி, அதனை உறுதிப்படுத்தி, அதற்கு வளமும் வலுவும் சேர்த்து வளர்ச்சியளிக்கும் வகையில் அன்புடன் அதன் அருகில் இருப்பதே உடனிருப்பு.

இன்று உடனிருப்பு என்பது, சமுதாயத்தில் அருகிக் கொண்டே போகின்றது. உறவுகள், தொடர்புகள் அதிகரித்த வண்ணமே இருந்தாலும் உண்மையான உடனிருப்போ இன்று குறைந்து கொண்டிருக்கிறது. வெளியூர்ப் பயணங்களால், கலாசார மாற்றங்களால், சமூகத் தொடர்பு சாதனங்களால் உண்மையான உறவு அழிக்கப்படுகின்றது. இது பலரை அந்நியப்படுத்தவே செய்கின்றது. நாம் ஒரே தெருவில் குடியிருந்தாலும் சாதி, சமய, மொழியினால், இனத்தினால் உடனிருப்பின்றி அந்நியர்களாகவே உள்ளோம்.

இன்றைய அரசியல், நிர்வாக, பொருளாதாரக் கட்டமைப்புகள் கூட உடனிருப்புக்கு உலை வைப்பதாகவே உள்ளன. இன்று இனப்பிரச்சினைகளால், கொலை, கொள்ளை, ஆள்மாறாட்டம் போன்ற நிகழ்வுகள் ஒட்டுமொத்த சமுதாய உடனிருப்பையே உருக்குலைத்த வண்ணமுள்ளது. இருப்பினும் இறைவன் நம் எல்லா வேளைகளிலும் எம்முடன் உடனிருக்கின்றார்.

நற்கருணை உடனிருப்பின் அடையாளம். (யோவான் 14:18) "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்" என தம் சீடர்களுக்கு உறுதியளித்த இயேசு இறந்தும் உயிர்பெற்று நம்மை வாழ்விக்கும் உன்னத அடையாளமான நற்கருணை மூலம் அவர் எம்முடன் உடனிருக்கின்றார். அது இயேசுவின் நீங்காத உடனிருப்பை நமக்கு உணர்த்துகிறது.

ஏழை, எளியோரில் இயேசுவின் உடனிருப்பை அது வெளிப்படுத்துகின்றது.

"உயிரில் கலந்து உணர்வில் நனைந்து உறவில் நிலைத்தவர் மன்னவன் இயேசு"

"இன்று உறவுகள் என்பது, இதயத்தை இருட்டாக்கி உதட்டில் மட்டும் சாயம் பூசும் இயந்திர காலமாக உள்ளது"

இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் கையளிப்பதிலும் இரண்டு முக்கிய அம்சங்களைக் காணமுடிகின்றது.

1. உடலை உண்பது, இயேசுவின் வாழ்வில் பங்குகொள்வது.
2. இரத்தத்தைப் பருகுவது, அவரது இறப்பில் பங்கு கொள்வதாகும்.

"விண்ணிலிருந்து இறங்கிவந்த உயிருள்ள உணவு நானே, இதை உண்பவர் வாழ்வு பெறுவர்" (யோவா 6:51)

இங்கு மனித உறவும் இறை உறவும் இணைகிறது. உறவுகளின் உச்சக்கட்ட, இறுதிக்கட்ட வெளிப்பாடே இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் நமக்குக் கொடுத்தது.

"எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர், நானும் அவரில் நிலையான உறவில் நிலைத்திருப்பேன்" என்றார்.

கிறிஸ்துவின் உடலையும், இரத்தத்தையும் அடையாள முறையில் தகுந்த மனநிலையோடு நாம் உட்கொள்ளும்போது அவரின் உறவில் நிலைத்திருக்கின்றோம். வாழ்வின் உணவை, ஒன்றிப்பின் உணவை உண்டு, கிறிஸ்துவின் வாழ்வோடு ஒன்றித்திருப்போம். "உங்கள் இதயக் கதவுகளைச் சற்று திரும்பிப் பாருங்கள். அங்கே இயேசுவின் இரத்த வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன".

– ஆசிரியர்

**இறைவார்த்தை**

**"விண்ணிலிருந்து இறங்கிவந்த உயிருள்ள உணவு நானே, இதை உண்பவர் வாழ்வு பெறுவர்"**

*(யோவா 6:51)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம்

- ம. ஜோசப்ராஜ் -

பழைய ஏற்பாட்டில் இறைவன் தமது மக்களுடன் உறவுகொள்ள விரும்பினார். இஸ்ராயேல் மக்களும் தங்களுடைய வாழ்க்கையில் இறைவனின் பிரசன்னத்தை மிக முக்கியமானதொன்றாகக் கருதினர். இறைவன் அவர்களுக்குக் கொடுத்த 'மன்னா' என்ற அதிசய உணவை உடன்படிக்கைப் பேழையில் வைத்து வணங்கி வந்தனர். அவர்கள் பயணம் செய்தபோதெல்லாம் உடன்படிக்கைப் பேழையை உடன் எடுத்துச்சென்றனர். எருசலேமில் ஆலயம் எழுப்பியபோது அதன் தூயகத்துள் உடன்படிக்கைப் பேழையை வைத்தனர். இறைவன் இஸ்ராயேல் மக்களை நெருப்புத் தூண் மற்றும் மேகத்தூண் வடிவிலிருந்து வழிநடத்தினார். இவை அனைத்தும் இஸ்ரயேலருடைய வாழ்க்கையில் இறைவனின் பிரசன்னத்தைக் குறிக்கின்றன.

புதிய ஏற்பாட்டில் இயேசு மக்களுடன் தமக்குள்ள உறவை தொடர்ச்சியானதொன்றாக்க விரும்பினார். இதற்காகவே நற்கருணையை ஏற்படுத்தினார். கடைசி இராவுணவு நிகழ்ச்சியானது இதனைத் தெளிவாக விளக்குகின்றது.





“இது என் உடல், இது என் இரத்தம், என் தசை மெய்யான உணவு. என் இரத்தம் மெய்யான பானம்” என்ற இயேசுவின் சொற்களும் தகுதியான தயாரிப்பு இல்லாமல் நற்கருணை உட்கொள்வது இயேசுவின் திரு உடலுக்கு எதிராகச் செய்கின்ற பாவமாகும், என்ற புனித பவுலின் அறிவுரையையும் நற்கருணையில் இயேசுவின் மெய்யான பிரசன்னத்தை எடுத்துரைக்கின்றன.

லூத்தரன் சபையைச் சார்ந்தோரும் நற்கருணையில் இயேசுவின் பிரசன்னத்தை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், நற்கருணை கொண்டாடும் பொழுது மட்டுமே அதில் இயேசுவின் பிரசன்னம் உண்டு என்று சொல்லி நற்கருணையை திருப்பலிக்குப் பின் பேழையில் வைத்து ஆராதனை செய்வதை அவர்கள் ஏற்பதில்லை. அதுபோல மற்றக் கிறிஸ்தவச் சபையினர் மத்தியிலும் நற்கருணை ஆராதிக்கப்படுவதில்லை.

கத்தோலிக்கரைப் பொறுத்த மட்டில் இயேசுவின் பிரசன்னம் மெய்யானது, நிலையானதும்கூட என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தப் பிரசன்னம் பற்றிய விளக்கத்தில் பல இறையியல் கருத்துகள் நிலவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மகிமை மிகு லூர்த்து நகர்

- தொகுப்பு -
இன்பம்

இன்று சுமார் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களைக் கொண்டு விளங்கும் லூர்து நகரில் 1858ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் நாள் (Bernadate) பேணடேட் என்னும் சிறுமிக்கு மசபியேல் என்ற மலைக் குகையில் தோன்றினாள் அன்னை மரியா.

பின், தொடர்ந்து பல நாட்களாக அவரது காட்சி இடம்பெற்றது. இறுதிக் காட்சி இடம்பெற்ற நாளன்று சுமார் இருபதாயிரம் மக்கள் அங்கு கூடியிருந்தனர். அங்கு அன்னை "நாமே அமலோற்பவம்" என்று மொழிந்தாள். தான் தோன்றிய இடத்தில் தனக்கு ஓர் ஆலயம் எழுப்ப வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டாள்.

அதன்படி, அன்னை தோன்றிய கெபியை ஒட்டி ஒரு கோயில் அல்ல, ஒன்றின் மேல் ஒன்றாக மூன்று கோயில்கள் அடுக்கி வைத்ததுபோல் அமைக்கப்பட்டுள்ளன.

தரை மட்டத்திலுள்ள கோயில் மசபியேல் குன்றையொட்டி, அதை ஓரளவு குடைந்து அமைக்கப்பட்டுள்ளது. இதை அடுத்து செபமாலை மாதா பேராலயம்.

மண்ணுக்கும் விண்ணுக்கும் அரசியாக அன்னை முடி சூட்டப்பட்டதை நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளது, நடுப் பீடத்தில் அமைந்துள்ள அன்னையின் சுரூபம்.

நடுப்பீடத்தைச் சுற்றியுள்ள 15 சிறு பீடங்கள் செபமாலையின் 15 இரகசியங்களின் பெயரால் அமைந்துள்ளன.

ஒவ்வொரு 10 மணியையும் குறிக்கும் நிகழ்ச்சி, அழகிய ஓவியமாக பீடத்தின் பின்னணியில் விளங்குகிறது.

இக்கோவிலில் சுமார் 6000 மக்கள் இறை வழிபாட்டில் பங்கெடுக்கலாம். இவ்வாலயத்துக்கு மேல் விண்ணையளந்து நிற்கும் ஆலயம் அமல அன்னையின் பேராலயமாகும். இங்கு 15 சிற்றாலயங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் பன்னிரு வண்ணக் கண்ணாடி ஜன்னலில் கதிரவன் ஒளியிட்டு, உயிர் பெற்று எழுவதைக் காணலாம். அன்னை மரியா பேணடேட் (Bernadate) க்குக் கொடுத்த பல்வேறு காட்சிகளே இங்கு வண்ணச் சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

அடுத்து, மசபியேல் குகையில் பேணடேற்றுக்கு (Bernadate) அன்னை தோன்றிய பாணியில் செய்யப்பட்ட சுரூபம் அவர் நின்ற மாடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

லூர்த்து அன்னையின் முதல் சுரூபத்தைச் செதுக்கிய சிற்பி, பேணடேற்றை பலமுறை சந்தித்து, அவர் அன்னையின் முகபாவத்தை வர்ணிப்பதைக் கேட்டு, அதை அப்படியே →





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இலங்கை ஆயர்கள் உரோமைக்குப் பயணம்

இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள், உலகக் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை சந்திக்க உரோம் நகருக்குச் சென்றிருந்தனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தந்தையை ஆயர்கள் வழக்கமாகச் சந்திக்கும் நடைமுறைகளுக்கேற்ப, இலங்கை ஆயர்கள் இப்பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இதேவேளை எதிர்வரும் 2015ம் ஆண்டு ஜெனவரித் திங்கள் இடம்பெறவிருக்கும் திருத்தந்தையின் இலங்கைக்கான வருகையின்போது இலங்கையின் அப்போஸ்தலரான முத்திப்பேறுபெற்ற யோசப்வாஸ் அடிகளாரை, புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான பிரகடனமொன்றைச் செய்யுமாறு திருத்தந்தையிடம் இலங்கை ஆயர்கள் கோரிக்கை விடுத்ததாகத் தெரியவருகிறது.

## முன்னாள் திருத்தந்தையர்கள்

## புனிதர்களாகப் பிரகடனம்



முன்னாள் திருத்தந்தையர்களான புனித 23ம் அருளப்பர் மற்றும் புனித 2ம் அருளப்பர் சின்னப்பர் ஆகியோர் கடந்த ஏப்ரல் மாதம் 27ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர்களாகப் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளனர்.

2ம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டி திருச்சபையில் மாபெரும் மாற்றத்திற்கான வாயிலைத் திறந்து விட்டவர் திருத்தந்தை 23ம் அருளப்பர். அதேவேளை திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அவர்கள் உலகின் பல நாடுகளுக்கும் பயணம் செய்து திருச்சபையின் வளர்ச்சிக்கு உறுதியும், உற்சாகமும் தந்து, பயணம் செய்யும் திருத்தந்தை எனப் பெயர் பெற்றிருந்தவர். பல சுற்று மடல்களையும், நூல்களையும் எழுதியுள்ள இவர் பத்துக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்தவர். தொடர்பூடகங்களோடு நெருக்கமான உறவுகளைப் பேணி வந்ததோடு, அவைகளை நற்செய்திப் பணிக்காக அதிகளவில் பயன்படுத்த வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டிருந்தவர்.



சிலையாக வடிக்க முயன்றார். பலமுறை முயன்று பல திருத்தங்கள் செய்து இறுதியாக வடித்ததை, இது ஓரளவு அன்னையின் தோற்றத்தைப் பிரதிபலிக்கிறது என்று பேணடேற் கூறினார். அந்தச் சுரூபமே இன்று மசபியேல் குகை மாடத்தில் நிறுவப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தீர்க்கதரிசனங்களின் நிலம் 05

பயணக் கட்டுரை




அ.ச. பாய்வா

யெருசலேமின் அமைவிடம் யூதர்களின் பிரதேசமான யூதேயா. இங்குதான் ஹெப்ரோன், பெர்ஷாவா, ஜெரிக்கோ, ரம்லா (யாசீர் அரபாத் வாழ்ந்த இடம்) போன்ற முக்கிய நகரங்கள் இருக்கின்றன. இயேசு பிறப்பெய்திய 'பெத்லகேம்' நகரம் இங்கு தானுள்ளது. இயேசு கலிலேயர் என்று அழைக்கப்பட்டாலும், அவரது பிறப்பு யூதேயாவில்தான்.

புவியியல் மட்டத்தில் யெருசலேமின் முக்கியத்துவம் அபரிமிதமானது. மிகவுயரத்தில், உலகத்தின் மையத்தில் அமைந்திருப்பதுதான் அது. உலகை எப்பகுதியிலிருந்து அளவிட்டாலும் அதன் மையத்திலிருப்பது யெருசலேம்தான். உலகத்தின் இந்த மையத்தில்தான் இயேசு பிறந்தார் என்பது கவனத்திற்குரியது.

இதே யெருசலேமில்தான் யூதர்களும் வாழ்கிறார்கள். பலஸ்தீனியர்களும் வாழ்கிறார்கள். ஆனால், ஒருவருக்கொருவர் பகையோடும் விரோதத்தோடும் வாழ்வதுதான் அதன் துரதிர்ஷ்டம்.

யெருசலேம் என்றவுடன் அனைவரின் நினைவுக்கும் வருவது அது ஒரு புனித பூமி என்பது மட்டுமே! யூதர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் அவ்வாறே! ஆனாலங்கு நடப்பது போர் ஒன்றுதான்.

யூதர்களின் புனித ஸ்தலமாக (கி.மு) சொலமன் அரசன் முதல் ஆலயத்தைக் கட்டினார். வருடத்திற்கொருமுறை மூன்று பண்டிகைகளைக் கொண்டாடி, பொருத்தனைகளின் காணிக்கைகளைச் செலுத்த யூதர்கள் அங்கு வருவார்கள். யெருசலேம் தமக்கெனக் கடவுளால் தரப்பட்ட நித்தியஸ்தலம் என்பது அவர்கள் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இசுலாமியர்கள், மெக்கா, மதினாவுக்கு அடுத்த முக்கிய ஸ்தலமாக யெருசலேமைக் கருது கிறார்கள். இங்கிருந்துதான் முகமது நபி யவர்கள் மோட்சத்துக்குச் சென்று திரும்பி னார் என்பது அவர்கள் நம்பிக்கை.

யெருசலேமில் மொத்தமாக மூன்று யூத ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தன. சலமோன் கட்டிய பிரமாண்டமான ஆலயம் கி.மு. 607ல் பபிலோனை (ஈராக்) ஆண்ட அரசன் 'நெபுகாத்நேச்சர்' என்பவனால் இடிக்கப்பட்டு, யூதர்களை அவன் சிறை பிடித்தான். எழுபது ஆண்டுகளின் பின்னர் மீண்டு வந்த யூதர், இடிக்கப்பட்ட முதல் ஆலயத்தை தேவ மனிதனான 'நெகேமியா' என்பவரைக் கொண்டு கட்டுவித்தனர். பின்னர் அதுவும் இல்லாமல் போயிற்று.

மூன்றாவது ஆலயத்தை ஏரோது மன்னன் கட்டுவித்தான். நீண்டகாலமெடுத்துக் கட்டிய இந்த ஆலயந்தான் இயேசுவின் காலத்திலுமிருந்தது. (இந்த ஏரோது மன்னன் தான், யூதர்களின் அவலங்களுக்கெல்லாம் மூல காரணம். இது ஒரு தனி வரலாறாகப் பார்க்கப்பட வேண்டியது).

"கல்லின்மேல் கல் இல்லாதபடி இடிக்கப்படும்" என்று இயேசு தீர்க்கதரிசனம் உரைத்ததும் இதனையொட்டித்தான். அதன் பிரகாரம், கி.பி. 7ம் ஆண்டு உரோமைப் பேரரசன் 'தீத்து' என்பவனால் இவ்வாலயம் இடிக்கப்பட்டது. அதன் பின்னர் அதே ஆலய மிருந்த இடத்தில் முஸ்லிம்களின் *DOM OF THE ROCK* மசூதியும், அல் அக்ஸா மசூதியும் கட்டப்பட்டுள்ளன.

அங்கு மதவெறியை விதைத்தவர்கள் கலீபாக்களோ, உமர்களோ அல்ல, அவர்க ளுக்குப் பின் வந்த சுல்தான்கள்தான். அதன் பின்னர்தான் யெருசலேத்துக்கான சிலுவைப்


நெபுகாத்நேசர் அரசன்

போர்கள் தொடங்கப்பட்டன. அதற்கு வெகு காலத்தின் பின்னர் அகழ்வாராய்ச்சி என்கிற பெயரில் மசூதியின் ஸ்திரத்தன்மையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது இஸ்ரேல் அரசு. இந்த மசூதியின் இன்றைய நிலையைப் பார்க்க முடியாத அளவுக்கு அங்கு இறுக்கம் நிலவுகிறது.

எனது பயணத்தின் அடுத்த கட்டம் யோர்தான் நதியை நோக்கியது. இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தும் யோர் தான் பாலை நிலத்தில் வற்றாது இன்றுவரை ஓடிக்கொண்டிருப்பதே பெரும் அதிசயமும் புதுமையுந்தான். இயேசு திருமுழுக்குப் பெற்ற அதே நதியில் நானும் என் திரு முழுக்கைப் புதுப்பிக்கப் போகிறேன் என்கிற பரவசத்தில் நான் பயணஞ்செய்த தூரமோ, வழியில் தென்பட்டவைகளோ என்னைப் பெரிதும் பாதிக்கவில்லை. கிட்டத்தட்ட மன்னா ருக்குள் நுழையுமுன் பயணிப்போமே ஒரு நீண்ட வெம்மையும் வெறுமையுமான பிரதேசம், அதேமாதிரியானதுதான் அந்த அமைவிடமும். பாதையின் இரு மருங்கிலும் 'கண்ணிவெடி கவனம்'' என்கிற அறிவுறுத் தல்கள்தான்.

ஐம்பது மீற்றர் அகலமான ஒரு நதியை கொங்கிறீட் தூண் வேலியால் இரண் டாகப் பிரித்து வைத்துள்ள கொடுமையை அங்குதான் கண்டேன். நாங்கள் நின்ற பகுதியில் இஸ்ரேல் இராணுவம் எதிர்க்கரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எப்போது நாம் அடுத்தவர் என்ன
நினைப்பார்களோ என எண்ணிவாழ்கின்றோமோ
அப்போதெல்லாம் நம் வாழ்வு நரகமாகிறது.
நாம் நாமாக வாழ்வதுமில்லை,
நலமாக வாழ்வதுமில்லை!
நான்கு அடிகள் முன்னோக்கி வைக்கும் முன்னமே
நாற்பது தரம் பின்னோக்கிப் பார்த்துவிடுகிறோம்.
இது நம் இலக்கு நோக்கிய பயணத்தை
தாமதாக்கி விடுகின்றது!
நிதானமாக எண்ணிப்பார்க்கையில்
அடுத்தவருக்காக வாழ்வது என்பது வேறு
அடுத்தவர் கருத்துக்காக வாழ்வதென்பது வேறு
என்று நமக்குத் தெளிவாகும்.
நாம் நாமாக வாழ முற்படும்போது
அனைத்துமே அமைதியாகிப்போகும்!
ஒரு ஐந்துபேர் சொல்வதைக் கேட்க
முற்பட்டாலே போதும் அனைத்தும் அம்பேல் ஆகிவிடும்.

● ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம்

## எண்ணிப் பார்க்கையில் .... 06

யில் யோர்தான் இராணுவம், எப்போதும் தயாரென் கிற நிலையில் நிலையெடுத்தவாறு இருவரும் துப்பாக்கியின் விசையை அழுத்த வேண்டியது தான் பாக்கி. தண்ணீரில் கொழுந்து விட்டுப் பற்றியெரியக்கூடிய பகை.

எனக்கும் கொஞ்சம் யோசனைதான். முப்பது வருடப் போர் வாழ்க்கையும் அதன் அனுபவங்களும் என்னை வழி நடத்திற்று. யோர்தானில் மூழ்கி எழுந்த போதும், ஈராயிரமாண்டுகளுக்கு முந்தைய நினைவுகளிலிருந்து எழ நீண்டகாலம் பிடித்தது. நதி ஒரு குறி யீடுதான் என்பதற்கப்பாலும் மறைந்து கிடக்கும் பேருண்மைகள் என்னால் விபரிக்க முடியாதவை. என்னுடைய அறிவுக்கும் ஆன்மீகத்துக்கும் அப்பாற் பட்டவை.

ஒன்றா, இரண்டா! எத்தனையெத்தனை சடங்குமுறைகளங்கு. ஒவ்வொரு நாட்ட வரும் அந்தச் சடங்கை அனுபவித்த விதமே அலாதியானது. வெள்ளை உடைய ணிந்து, நீரில் நனைந்தெழுந்து, தங்கள் உள்ள ரங்கம் தெரியத்தக்கவாறு நின்றுகொண்டு, இசைக் கருவிகளை மீட்டிச், சங்கீதங்களைப் பாடிய விதமும் கண்கொள்ளாதுதான். இரண்டு கரையிலும் நின்றிருந்த இரண்டு இராணுவங்களும் தங்கள் பகைமையை மறந்து நின்றது அந்தக் காட்சிகளில்தான். யோர்தான் நதியின் 'நதிமூலம்' பற்றிக் கிடைத்த தகவல்களும், பின்னர் உலக சரித்திரம் தொடர்பான நூல்களில் யோர்தான் நதியின் 'மூலம்' பற்றிய தகவல்கள் கிட்டாத படியாலும், நதியைப் பற்றி எழுத முடியாதுள்ளது. ஆனால் சாக்கடலில் அது சங்கமமாகிறது என்பதை படங்கள் குறிப்பி டுகின்றன.

- தொடரும்....

குறும்(புப்)பா – 132

ஆசுதான் வாழ்க்கையெனச் சொல்வார்
கடமைகளைச் செய்யமனம் விரும்பார்
மாசுநிறை மனம்பேச்சு மாளாத பொருளாசை
வீசிடுமோ வாழ்க்கைதனில் தென்றல்?



- மலர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**அ**ண்மையில், வீரகேசரிப் பத்திரிகையின் முதலாவது இதழைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இது 1930ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06ம் திகதி வெளியிடப்பட்டிருந்தது. பக்கங்களின் எண்ணிக்கை எட்டு: பத்திரிகையின் விலை சதம் ஐந்து. பத்திரிகையின் மேல் முகப்பில், இரண்டு சிங்கங்கள் 'வீரகேசரி' என்னும் பெயரை இரண்டு அந்தங்களிலும் ஒவ்வொரு கைகளால் தாங்கிப் பிடித்த வண்ணமும், மற்றைய கைகளால் தலா ஒரு நீண்ட வாளினை தூக்கிப் பிடித்தவாறும் காணப்பட்டன. அத்துடன் இலங்கை, இந்திய தேசியக் கொடிகளும் வரையப்பட்டிருந்தன. தலைப்பின் கீழ்ப்புறம் ஆசிரியர் திரு. பெ. பெரி. சுப்பிரமணியச் செட்டியார் என்றும் காணப்பட்டன.

செய்திகள் குட்டிக் குட்டித் தலைப்புடன் காணப்பட்டன. சில செய்திகளைப் பார்க்கலாம்.

**கோர்ட்டு விடுமுறை**

குதிரைப் பந்தயத்தை முன்னிட்டு
கொழும்பு சிவில் கோர்ட்டுகள் எல்லாம்
நாளிது ஆகஸ்ட்டு மாதம் 8ந் திகதி
வெள்ளிக்கிழமை பூட்டப்பட்டு 22ந் தேதி
வெள்ளிக்கிழமை மீண்டும் திறக்கட்டும்.

**பேங் விடுமுறை**

குதிரைப் பந்தயத்தை முன்னிட்டு
நாளிது ஆகஸ்டு மாதம் 7-ந் திகதி
வியாழக்கிழமையும், 13ந் திகதி
புதன்கிழமையும் பகல் 1 மணியோடு
மூடி விடப்படும்.

**மருதானைப் பள்ளி வழக்கு தீர்ப்பு**

நேற்று அதாவது ஆகஸ்ட் மீ 4உ
அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்த மரு
தானைப் பள்ளி வழக்கில் டிஸ்ரிக்ட்
கோர்ட் தீர்ப்பு நேற்றுக் கூறப்படாமல்
ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

இது தவிர வலப்பக்கம் (நான்காவது 'கொலம்') கீழ்ப்புற மூலையில் கீழ் உள்ளவாறு இரண்டு வரி விளம்பரம் இருந்தது.

---

வீட்டிற் கழகு வீரகேசரியை
வரவேற்றல்

---

பதினொரு வருடங்கள் கழிந்து அதாவது 1914ம் ஆண்டு ஜனவரி மாதம் 28ந் திகதி வெளிவந்த வீரகேசரியின் விலையும் அதே ஐந்து சதம்தான். பத்திரிகையின் தலைப்புச் செய்தியாக பின்வரும் விடயம் காணப்பட்டது.

---

பாபு சுபாஷ் சந்திரபோஸ் காணப்படவில்லை
வீட்டிலிருந்து திடீரென
மறைந்த மாயம்.

---

வாசிக்க வாசிக்க இனிமையாக இருந்தது. ஆனால், உண்மையில் வாசிப்புப் பழக்கம் வரவர அருகி வருகின்றது. இவ்வாண்டு வந்த (2013) க.பொ.த. பரீட்சை முடிவுகளில் கணிசமான அளவு

10ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறுங்கதை – 05

# மரணச் சடங்கு



வெளிநாட்டிலிருந்து வரப்போகின்ற புத்திர சிகாமணிகளுக்காக, பொய்த்துப்போன காயமொன்று காற்றிழந்து சடமாகக் கிடந்தது.

அவர்கள் வந்து சேர்ந்தபோது, ஓலமிட்டு அழுத குரல்களெல்லாம் சில கணப்பொழுதில் அமைதியாகிவிட்டன.

மூன்றிரவுகளாக துயிலைத் தொலைத்த சிலர் தவ முனிகள்போல் ஆங்காங்கே சுவரோடு சாய்ந்து தம்மை ஆசுவாசப் படுத்திக்கொண்டனர்.

தமக்கென்றொரு பெயரோடு தலைநிமிர்ந்து நடந்தவர், இன்னும் சிலமணி நேரத்தில் 'சவம்' என்ற பொதுப்பெயரில் அமைதியாக யாத்திரை புறப்படத் தயாராகக் காத்துக்கிடந்தார்.

கருநீல நிற ஜீன்ஸ், சேர்ட், தொப்பிகள் அணிந்து, ட்றம்ஸ், கோல்கள், ஊது கருவிகள் சகிதம் வெள்ளை நிற வாகனம் ஒன்றில் வந்திறங்கினார்கள் வாத்தியக்காரர்கள்.

சில நிமிட மௌனக் கரைதலில் அமளிதுமளி ஆர்ப்பாட்டமென அந்தக் கன்னங்கரிய உருவங்கள், அவரவர் விருப்பம்போல் தத்தம் தலைகளை பல் கோணங்களில் உலுப்பியவாறு அமர்க்களப்படுத்தினார்கள்.

சில வயோதிபங்கள் ஆட்டத்திற்கேற்பவோ, தப்புத் தப்பாகவோ தாளம் போட்டன.

உள்ளே இறங்கிய மாமருந்துந்துக்கேற்ப, 'வைன்' கொடுத்த பொம்மைகள் போல் இயந்திரத்தனமாக இயங்குவதாக இவனுக்குப்பட்டது.

ஆடிய ஆட்டமடங்கி சில நிமிடங்கள் ஓய்வெடுப்பதும், இழவு வீட்டிற்கென வருபவர்களின் வருகையை அறிவிக்குமுகமாக வெளுத்து வாங்குவதுமாக அவர்கள் தம் கடமையிலும் குறியாக இருந்தார்கள்.

அந்த இடியோசை முழக்கத்தால் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அவதிப்பட்ட சிலர், சற்றே ஆறுதலாக 'புதினம்' வாசித்தார்கள்.

மறைந்தவர் பற்றிய தகவல் பரிமாற்றம், தமது சொந்த சமாசாரங்கள் பகிர்வு என்றின்னவாறாக சில நிமிடங்கள் கரைய, மீண்டும் 'பாண்ட்' வாத்தியங்களின் முழக்கத்தில் எல்லாமடங்கின.

சிறிது நேரம் தலைமறைவாகி மீண்டும் ஆஜரானவர்கள், முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டே, உள்ளே இறங்கிய ஊக்குவிப்புப் பானத்தின் உசாரால் உச்சஸ்தாயியில் திசை மாற்றி, 'காயமே இது பொய்யடா....' என்று பழையதில் தொடங்கி, தடம் மாறி 'வாடா மச்சான் வாழமரத் தோப்புக்குள்ளே....'' என்று ஊது குழல்காரன் உச்சத்தைத் தொட, ஆர்ப்பரித்தார்கள்.

யாரோ நிறுத்தும்படி சைகை காட்டியும் அந்த ஓசை காற்றில் பரவி செவிகளில் நாராசமாக விழுந்தன.

அதனைப் பொறுக்கமாட்டாத பெண்கள் பெருங்குரலெடுத்து ஒப்பாரி வைக்க, அவர்கள் விலகிப் போயினர்.

வெடியோசை முழங்க ஊர்வலம் புறப்பட்டது. அந்த ஆத்மாவுக்கு அமைதி வேண்டி இரங்கல் திருப்பலியும் ஆலயத்தில் நிறைவேற்றப் பட்டது.



- ஷிகேயம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொறுத்தருள்வாய்...!

இயற்கை மீது வன்பு கொண்டு
இயற்கையை மறந்தமைக்காக ....
மனித உறவினைச் சிதைத்து
இழி செயல்களைப் புரிந்தமைக்காக .....
எம்பிழையெல்லாம் பொறுத்தருள்வாய்.


அன்பே உருவான உன்னை
ஆணவச் செருக்கால் நோகடித்தமைக்காக ....
மனச்சாட்சி அற்று பிறர்
மனங்களை நையப் புடைத்தமைக்காக .....
எம்பிழையெல்லாம் பொறுத்தருள்வாய்!

குற்றம் என்ற உணர்வு நிலை
மெய்ப்பட்ட போதும்
அக்குற்றம் மீள் உருப்பெறுவதற்காக ....
எம்பிழையெல்லாம் பொறுத்தருள்வாய்!

போலி வேடம் தரித்துத் தினம்
உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும்
நயவஞ்சக நிலை எம்மில்
தொடர்கதையாவதற்காக .....
எம்பிழையெல்லாம் பொறுத்தருள்வாய்.

கூடியிருந்து கும்மாளம் கொட்டி
குடிதனைக் கெடுக்கும்
கொடிய மனநிலைக்காக ......
எம்பிழையெல்லாம் பொறுத்தருள்வாய்.

■ – யாழ் ராதவல்லி –



இலக்கிய மஞ்சரி

அடுத்த ஞாயிறு திருப்பலியின்போது பாதிரியார் தமது பிரசங்கத்தில், அந்தச் சம்பவத்தை நினைவு கூரும் விதமாக தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்:

"....... அமைதியான பிரார்த்தனைகளுடன் செபங்கள், ஒப்பாரி, வியாகுல பிரசங்கமென நிறைவேற்றவேண்டிய மரணச் சடங்கில், இந்த பாண்ட் எல்லாம் தேவைதானா...? அப்படியே தேவையெனக் கருதினாலும், அவர்களுக்குக் கொடுக்கிற கூலி போதாதா...? மது கொடுக்கவேண்டிய அவசியமென்ன....? அவரது ஆன்மா மோட்ச பாக்கியத்தை அடையவேண்டி திருப்பலி நிறைவேற்றுகிறோம். வாழைமரத் தோப்புக்குள் அனுப்பினால் அவராத்மா மோட்ச பாக்கியத்தை அடைவதெப்படி....?"

அடுத்த நாளே பாதருக்கு 'மொட்டைக் கடிதங்கள்' பறந்து வந்தன ...... ■ ■

பிள்ளைகள் தாய்மொழியில் 'A' சித்தி பெறத் தவறியுள்ளனர். இணையம், ஆங்கில மொழி போன்றவற்றில் காட்டும் ஈடுபாட்டை எமது பிள்ளைகள், தாய்மொழி தொடர்பான அறிவையும், உடற்கல்வி மற்றும் விளையாட்டுகள் தொடர்பான அறிவையும் பெற்றுக்கொள்வதில் தவறிவிடுகின்றனர். இதனால்தான் இளவயதில் நீரிழிவு நோய் ஏற்பட வாய்ப்புண்டாகின்றது.

எனவே, நாம் அனைவரும் இது தொடர்பாகக் கவனம் செலுத்தத் தலைப்பட வேண்டும். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கத்தோலிக்க திருமறை

# மாணவர் பக்கம்

• நிவ்ஷினி கஜேந்திரன்




## இலங்கைத் திருச்சபை வரலாறு

இலங்கைத் திருச்சபை வரலாறு எனும்போது, இலங்கைத் தீவில் கிறிஸ் தவ மதம் தோன்றி உருவாகியது எப்போது? எவ்வாறு? மற்றும் அது பல இடங்களுக் கும் பரவி வளர்ந்த விதம், அதனுடன் தொடர்புடையவர்கள், அவர்கள் ஆற்றிய நற்பணிகள், அவர்கள் சாதித்த சாதனை கள் அதற்காக அவர்கள் பயன்படுத்திய வழிமுறைகள், இத்தகைய பணியிலே அவர்கள் சந்தித்த சவால்கள், முகம் கொடுத்த பிரச்சினைகள், தோல்விகள், இடைஞ்சல்கள், இடையூறுகள், எதிர்ப்பு கள், அவற்றை எதிர்கொண்ட விதங்கள் அனைத்தும் உள்ளடங்கிய தொகுப்பே இலங்கைத் திருச்சபை வரலாறாகும்.

நம் நாட்டின் கிறிஸ்தவ சரித்தி ரத்தை அறிவதன் மூலம் நாம் பல நன்மைகளை அடைகிறோம். நம் முன்னோர்கள் எவ்வாறு கிறிஸ்தவத்தை வாழ்ந்தனர், தம் விசுவாசத்தைக் காப்பதற் காக எத்துணை தியாகங்களைச் செய்தனர், அவ்விசுவாசத் தினை எவ்வாறு பகிர்ந்துகொண்டனர், அதனை எவ்வாறு பரப்பி வளர்த்தனர் என அறிய வரும்போது, அவ்விசுவாசத் தின் உயர்ந்த பெறுமதியினை உணர்ந்து, எம் விசுவாசத்தை மதித்து உறுதிப்படுத்தவும், அதனைப் பாதுகாக்கவும், எம் மதத்தின் மீதுள்ள பற்றை அதிகரித்து வளர்க்கவும் தூண்டப்படுகிறோம். பழைய ஏற்பாட்டில் இறைவன் இஸ்ரா யேல் வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்கள், நிகழ்ச்சிகள் வழியாக இஸ்ராயேலுடன் தொடர்புகொண்டு அவர்களுடன் பேசி, எச்சரித்து, வழிநடத்தி வருகிறார். எனவே, இந்த வகையில் இலங்கைத் திருச்சபை வரலாற்றை படிப்பதன் மூலம் இறைவன் எமக்களிக்கும் செய்தியை, எம்மைப் பற்றிய இறைவனின் திட்டத்தை, அவர் எமக்குக் காட்டும் வழிமுறைகளை அறியமுடிகிறது.

வரலாற்று நிகழ்ச்சிகள் மீண்டும், மீண்டும் நடை பெறுகின்றன. எம் முன்னோர் தம் மத வாழ்வில் தம் மதத் தின் வரலாற்றில் பல கலாபனைகளையும், எதிர்ப்புகளை யும், மன விரோதங்களையும் சந்தித்தனர். இத்தகைய வைகளை இன்றும் நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இந்த வேளைகளில் நாம் துணிவுடன் முகம் கொடுக்க திருச்சபை வரலாற்று அறிவு நமக்கு வழிகாட்டுகிறது.

இந்த வகையில், இலங்கை திருச்சபை வரலாற்றை நான்கு முக்கிய பகுதிகளாய் பிரிக்கலாம்.

i. போர்த்துக்கேயர் காலம் (கி.பி 1505 - 1657)
ii. ஒல்லாந்தர் காலம் (கி.பி. 1657 - 1796)
iii. ஆங்கிலேயர் காலம் (கி.பி. 1796 - 1948)
iv. சுயாதீன காலம் (தற்காலம்) கி.பி. 1948 .......

பொதுவாகப் போர்த்துக்கேயர் வருகையுடன்தான் அதாவது, 16ம் நூற்றாண்டுடன்தான் இலங்கைத் திருச் சபை வரலாறு ஆரம்பமாகிறது எனக் கொள்வர். எனினும், போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் இலங்கையில் கிறிஸ்தவ மதமோ, கிறிஸ்தவர்களோ இருக்கவில்லை எனக் கூறிவிட முடியாது. ஏனெனில், இவர்கள் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் கிறிஸ்தவர் கள் வாழ்ந்தார்களென பல கட்டுக்கதைகளும், பழங்கதை களும் ஆதாரங்களுடனான பல சான்றுகளும் உள்ளன. இவைகள் மூலமே இன்று பல வரலாற்று வல்லுநர்கள் போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்னர் கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ மதமும் இருந்ததென உறுதியாகக் கூறுகின் றனர். அடுத்துவரும் பகுதிகளில் இதன் விரிவான வளர்ச்சி களைப் பார்ப்போம். ■ ■ ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆழ்ந்த இறைநம்பிக்கையை விளக்கும்

## புனித அந்தோனியாரின் அற்புதங்கள்....





கடந்த ஆண்டு அந்தோனியாரின் திருநாளை ஒட்டி மட்/புனித அந்தோனியார் திருத்தல விழாக் குழுவினர் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை இது.

இம்மாதம் 13ந் திகதி புனித அந்தோனியார் திருவிழா கொண்டாடப்படுவதால் அதன் பொருத்தப்பாடு கருதி இக்கட்டுரை இடம்பெறுகிறது. (ஆ-ர்)





புனித அந்தோனியார் இறைவன்மேல் கொண்ட அசைக்க முடியாத ஆணித்தரமான நம்பிக்கையால் அளவிடற்கரிய அரிய அற்புதங்களைப் புரிந்தார் என்பதை எண்பிப்பதில் நான் உவகை அடைகிறேன்.

புனித அந்தோனியார் இம்மண்ணில் வாழ்ந்தபோது எண்ணற்கரிய அற்புதங்களைப் புரிந்தார். அவர் அகிலத்தை விட்டு அகன்று மண்ணில் மறைந்த பின்பும் தன்னை நாடி, வேண்டும் பக்தர்களுக்குப் பதமுடன் பலகோடி அற்புதங்களைக் கணப்பொழுதில் புரிந்து வருகிறார். அதற்கு அடிப்படைக் காரணம் அவர் இறைவன்பால் கொண்டிருந்த நம்பிக்கை என்பது வெள்ளிடை மலையாகும். மக்களின் அன்றாட வாழ்விலே தாங்க முடியாத வேதனைகள், நோய் நொடிகள், சோதனைகள், அவலங்கள், விபத்துகள் இவற்றிலிருந்து விடுதலை பெற அவசியமானது ஆழ்ந்த இறைநம்பிக் கையாகும். புனித அந்தோனியார், "எனக்கு வலுவூட்டுகிறவரின் துணைகொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு" (பிலிப்பு 4:13) என்ற நம்பிக்கையால் தன்னைத் தயவுடன் நாடிவரும் பக்தர்களுக்குப் பரிவுடன் அற்புதங்கள் புரிவதில் ஆனந்தம் கொண்டார்.





மேலும், புனிதரின் வாழ்வு செபத்தின் மூலமும் கடுந் தவத்தின் மூலமும் இறைவனோடு இறுகப் பிணைத் திருந்தது என்பதில் ஐயமில்லை.



இவர் பெரும் செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தனக்குக் கிடைத்த தனவந்தர் வாழ்வை விட்டுவிலகி, புனித பிரான்சிஸ் அசிசியாரைப் பின்பற்றி, கிறிஸ்துவைப் போல் ஏழ்மையில் விருப்பம் கொண்டார். கல்லைத் தலையணையாக வும், தரையைத் தன் படுக் கையாகவும் பயன்படுத்தித் தவம் புரிந்தார். ஓய்வின்றி ஒழுங்காகச் சேவையும் செய்தார். அவரது செப, தப வாழ்வுதான் அவரை ஆண்டவன் மேல் அசைக்க முடியாத







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அளவற்ற நம்பிக்கையில் அறுகுபோல் வேரூன்ற வைத்தது. அந்தச் சக்தியால்தான் பலகோடி அற்புதங்களைப் புரிந்தார்; இன்னும் புரிந்து கொண்டே இருக்கின்றார். அவர் புரிந்த அற்புதங்களிலே அதிகம் பிரசித்தி பெற்றது, 'இறந்தோரை மீண்டும் உயிர்பெறச் செய்த தாகும்.



எம் அற்புதர் அந்தோனியார் பாரில் பரிசுத்த ராய் வாழ்ந்தபோது அவரது கருத்தாழமிக்க மறை யுரையைக் கேட்பதற்குப் பக்தர்கள் தம் பணிகளை மறந்து பெருந்திரளாகத் திரண்டு வருவது வழக்க மாய் இருந்தது. ஒரு தினம் பெண்ணொருத்தி தன் சிசுவைத் தொட்டிலில் படுக்கவிட்டுப் புனிதரின் மறையுரையைக் கேட்க விரைந்தோடிச் சென்றாள். அவரது சிறந்த, கவர்ச்சியான மறையுரையில் மனதைப் பறிகொடுத்தவள் பலமணி நேரத்தின் பின்னர் மறையுரை முடிந்ததும் தன் இல்லத்திற்கு ஓடோடிச் சென்றாள். தன் சிசுவைப் பார்க்கத் தொட்டிலை அணுகினாள். அந்தோ பரிதாபம்! சிசு இறந்து விட்டது. அழுது புரண்டாள். புனிதரைக் காண கணப்பொழு தில் சென்றாள். அவர் அப்பெண்ணின் கண்ணீரைக் கண்டு கண் கலங்கினார். பரிவுடன் அவளிடம் அனைத்தையும் கேட்டறிந்தார். கண்களை மூடிக் கடவுளுடன் கணப்பொழுதில் ஒன்றித்தார். நம் நாதர் மேல் நம்பிக்கைக் கொண்டு உருக்கமாகச் செபித்தார். என்னே அதிசயம்...! இறந்திருந்த குழந்தை உயிர் பெற்றெழுந்தது. அந்த மாது அந்தோனியாருக்கு நன்றிகூறி இதமுடன் இல்லமேகினாள்.

புனித அந்தோனியார் விசித்திரமான விந்தைமிகு அற்புதச் செயல்களைச் செய்தார். இவைகள் இதுவரை எந்தப் புனிதராலும் செய்யப் பட்டதாக நாம் அறியவில்லை. அவர் இறைவன் மேல் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையால் இந்த அற்புதங் களைப் புரிந்தார். யெமோனே என்ற இடத்தில் சிறிய மடம் ஒன்று புனிதரின் மேற்பார்வையில் கட்டப்பட்டு வந்தது. அக்கட்டிடத்தைக் கடந்து சென்றவர்கள் சிறிதளவு கட்டிடப் பணியில் கரம் நீட்டிப் பணிவிடை செய்துவிட்டுப் போவது வழக்கமாய் இருந்தது. ஒரு தினம் ஒரு வாகனத்தில் பிரயாணிகள் பயணம் செய்துகொண்டிருந்தனர். புனிதர் அவர்களை அன்புடன் அணுகிக் கட்டிட வேலையில் கரம்நீட்டி உதவுமாறு கேட்டார். உடனே அங்கிருந்த ஒருவர் "என் இளைஞன் இறந்துவிட்டான். மரித்தவனின் உடலைக் கொண்டு செல்கின்றோம்" எனப் பொய் கூறித் தான் புனிதரை ஏமாற்றிவிட்டதாகப் பெரு மிதம் கொண்டு வாகனத்தில் ஏறினான். தன் மகனைத் தலைவன் தட்டி எழுப்பி னான். எழவில்லை. எட்டிப் பார்த்தான். தன் மகன் உண்மையாகவே இறந்து கிடந்தான்.



தந்தை செய்வதென்ன என அறியாது திகைத் தான். வாகனத்தைத் திருப்பிப் புனிதரைத் தேடிச் சென்றான். தனக்கு நிகழ்ந்தவற்றை விளக்கி புனிதர் முன் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டான். தான் செய்த தவறை எண்ணி வருந்தினான். அவனின் பரிதாப நிலையைப் பார்த்து உள்ளம் உருகி, உருக்க மாக இறைவன்மேல் நம்பிக்கை கொண்டு செபித்தார். இறந்த இளைஞன் உயிர்பெற்றெ ழுந்தான். தந்தை மனம் மாறினான். புனித அந்தோனியார் பாரில் பரிசுத்தராய் வாழ்ந்தபோது பரமன்மேல் கொண்டிருந்த நம்பிக்கையால் பலகோடிப் புதுமைகள் புரிந்தார். அதனால் அவரைக் 'கோடி அற்புதர்' என அன்புடன் அழைக்கின்றோம்.

எம் புனிதர் இறந்தவர்களுக்கு உயிர் அளித்தாலும், அவர் ஆண்டவர் மேல் கொண்ட நம்பிக்கையால் அற்புதம் அடைந்தோர் தன்பக்கம் சாரவேண்டும் என புனிதர் ஆசிக்கவில்லை. தனது பக்தர்கள், தான் புரியும் அற்புதத்தின் மூலம் இறைவன் பக்கம் செல்ல வழிகாட்டினார். பலர் மனம்மாறி இறைவனை அறிந்து உண்மைக் கத்தோலிக்கரா கினர். இன்றும் அதையே நம் அற்புதர் புரிகின்றார்.

ஒரு தினம் புனித அந்தோனியார் தன் கரங்களால் கஷ்டப்பட்டு எழுதிய புத்தகத்தை அவருடன் வாழ்ந்த சகோதரர் ஒருவர் திருடிச் சென்றபோது, எம் புனிதர் இறைவனோடு நம்பிக்கை யுடன் உருக்கமாக உறவாடினார். புனிதரின் நூலைத் திருடிச் சென்றுகொண்டிருந்த அருட்சகோ தரரை மிக்கேல் தூதன் இடைமறித்து வாளுடன் தோன்றிப் புனிதரின் நூலைத் திருப்பிக் கொடுக்கும் படி வற்புறுத்தினார். உடனே அருட்சகோதரர் புனிதரி டம் நடந்ததை விபரித்து, அந்நூலைப் புனிதரிடம் கொடுத்துவிட்டு மன்னிப்புக் கேட்டார்:மனம் மாறினார்: பரிசுத்த துறவியாகி இறைவன் மேல் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தார்.

புனித அந்தோனியார் உண்மை, நீதி, நேர்மையை நிலைநாட்ட அரும்பாடுபட் டார். ஒரு தடவை புனிதரின் தந்தை மேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர் புரியாத ஒரு கொலைக்குற்றத்தைச் சுமத்தி சிறைச்சாலையில் பூட்டி வைத்தனர். இந்த அநீதச் செயலைச் செவிமடுத்த புனிதர், சிறைச்சாலையை நோக்கி விரைந்து சென்றார். கொலை செய்யப்பட்டவனின் உடலை வெளியே எடுத்து இறைவன் மேல் நம்பிக்கை வைத்து இறந்தவனை உயிருடன் எழுப்பி அவனைக் கொன்றது யார் என வினவினார். அவன் அங்கிருந்த வேறு ஒருவன் தான் கொலையாளி எனக் காட்டிவிட்டு மீண்டும் இறந்துவிட்டான். புனிதரின் தந்தை நிரபராதி எனக்கூறி அதிகாரிகள் அவரை விடுதலை செய்தனர். அவர் மகிழ்வுடன் இல்லமேகினார்.

புனித அந்தோனியார் இறைவன்மேல் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையால் அவர் உயிர் நீத்தும் இன்னும் எண்ணிலடங்காப் புதுமைகள் செய்து வருகின்றார். குழந்தைகள் இல்லாதோருக்கு குழந்தைச் செல்வத்தைக் கொடுத்தார். இது எங்கள் குடும்பத்தில் நிகழ்ந்த உண்மையான அற்புதம். என் பெற்றோர் திருமணமாகிப் பல வருடங்கள் குழந்தைச் செல்வமின்றிப் புனித அந்தோனியாரை அண்டினர். எனது தாய் புனிதரின் கரங்களிலுள்ள குழந்தை இயேசுபோல் ஒரு குழந்தையைத் தரும்படி கண்ணீரோடு வேண்டினார்கள். ஓர் ஆண் குழந்தை கிடைத்தது. அவரைத் தொடர்ந்து என் தாய் ஐந்து குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். எமது குடும்பம் புனித அந்தோனியார் மூலம் இறைவனில் தளராத நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வருகின்றது. புனிதர் இறை நம்பிக்கையால் அற்புதங்கள் செய்து அதன் மூலம் பல பிற மதத்தினர் மனம்மாறிக் கத்தோலிக்கராகி இறையேசுவில் தளராத நம்பிக்கை கொள்ள வைக்கிறார். எனது மாமனார் ஒருவர் இந்து சமயத்தைச் சேர்ந்தவர். ஆனால், எனது தாயார் மூலம் புனித அந்தோனியாரில் பற்றுதல் கொண்டார். தனது கிராமத்து வீட்டின் முன்றலில் புனித அந்தோனியார் சுரூபம் ஒன்றை வைத்து செபித்து வந்தார். அக்கிராமத்தில் பலர் இந்து மதத்தினர். ஆனால், அந்தோனியார் மேல் பக்தி கொண்ட என் மாமனார் வீட்டு முன்றலில் இருந்த அந்தோனியாருக்கு மெழுகுவர்த்தி கொழுத்துதல், மாலை போடுதல், உணவுப் பண்டங்கள் பரிமாறுதல் இப்படியாகப் புனிதரின் பக்தி நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி இன்று அது புனிதரின் பெயரால் ஓர் ஆலயமாகிவிட்டது. அங்கு அடிக்கடி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது. எனது மாமனார் கத்தோலிக்கராக மதம் மாறி நல்ல மரணமடைந்தார். புனித அந்தோனியாரின் புதுமைகள் மூலம் இறைவன் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு வாழ்வோம்.

**அருட்சகோதரி லூர்ட்ஸ் F.M.M,**
**புனித திரேசா கன்னியர் இல்லம்,**
**மட்டக்களப்பு.**


# எதிரிதான்....

மேகமென்னும் கருப்பையை
கிழித்துக் கொண்டு வெளியேறும்
மழை என்னும் மழலைக்கு – தினம்
தேகத்தை முத்தமிடும்
வெயில் என்னும்
கதிரவன் கூட எதிரிதான்

சுவாசத்தின் வாசத்திலும்
வன்முறையைக் காட்டிவிடும்
வலிமை மிக்கோருக்கு
நிசப்தமாய் ஸ்பரிசிக்கும்
தென்றல் கூட எதிரிதான்

சிந்தையைச் சில்லறைத் தனமாக
சிறகடிக்கச் செய்யும் சிலருக்கு
சிரித்துப் பேசி
சிட்டாய்த் திரியும்
சிறு குழந்தைகூட எதிரிதான்

ஆக, மொத்தத்தில் .....
விண்ணுக்கு மண்ணும்
பெண்ணுக்கு ஆணும்
ஏழைக்குக் காசும்
கோழைக்குத் தீரமும்
எனக்கு என்மதியும்
உனக்கு நிம்மதியும் – கூட
எதிரிதான் கைக்கெட்டாதவரைக்கும்
......



**S. மேரி எமல்டா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலக்கிய வீதி

மட்டக்களப்பிலிருந்து கடந்த ஆறு ஆண்டுகளாக இருமாத இதழாக வெளிவரும் 'தென்றல்' தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகையின் 25வது இதழ் வெளியீட்டு விழா கடந்த ஏப்ரல் மாதம் 26ம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு மகாஜன கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தென்றல் சஞ்சிகையின் ஆசிரியரும், வெளியீட்டாளருமான க. கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உள்ளூர், வெளியூர் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், அதிகாரிகள், இலக்கியவாதிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எஸ். மனோகரன் அவர்களும், சிறப்பு அதிதியாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன முதுநிலை அறிவிப்பாளர் எஸ். மோசேஸ் அவர்களும் கலந்துகொண்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் திருமதி. றூபி வலன்ரினா பிரான்சிஸ் அவர்கள் 'தென்றல்' 25வது சிறப்பு மலர் பற்றிய அறிமுகவுரையை வழங்கினார். சஞ்சிகையின் பல்சுவை அம்சங்களைச் சுருக்கமாகக் கூறிச் சென்ற அவர், சஞ்சிகை பார்த்தவுடன் படிக்கத்தூண்டும் வண்ணம் கவர்ச்சியாக இருப்பதாகப் பாராட்டுத் தெரிவித்தார்.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். மனோகரன் அவர்கள் தமதுரையில் மாணவர்களிடம் தமிழ்மொழியின் மீதான ஆர்வம், தரம் குன்றி வருவதாகக் குறிப்பிட்டார். கடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்கள் மிகக் குறைந்த புள்ளிகளை, தமிழ்ப் பாடத்திலேயே பெற்றிருந்ததாகத் தெரிவித்த அவர், இளைய தலைமுறையிடம் மொழிப்பற்றையும் அறிவையும் வளர்க்க அனைவரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தயாரிப்பாளர் எஸ். மோசேஸ் அவர்கள் தமதுரையில், 'தென்றல்' சஞ்சிகையின் ஆசிரியரான திரு. கிருபாகரனின் குருவான பத்திரிகையாளர் வி.சு. கதிர்காமத்தம்பி அவர்களுடனான தமதுறவையும், தமது வளர்சிக்கு அவரே காரணராக இருந்தாரென்றும் நன்றியுடன் குறிப்பிட்டதோடு, திரு. கிருபாகரனோடு தனக்குள்ள அறிமுகத்தையும், அவரது முயற்சிக்கும், உழைப்பிற்கும் தனது பாராட்டையும் தெரிவித்தார். அதேவேளை மட்டக்களப்பில் காலத்துக்குக் காலம் பல்வேறு சஞ்சிகைகள் தோன்றியிருப்பினும், அவை எதுவும் நிலைக்கவில்லை எனவும், சஞ்சிகைகளின் தேவையையும், பொறுப்பையும் உணர்ந்து அவைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.







விழாவில் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூர், வெளியூர்க் கலைஞர்களுக்கு 'வீசு தென்றல்' விருதுகள் வழங்கப்பட்டன. அத்துடன் போட்டிகளில் வென்றோருக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. 'தென்றல்' ஆசிரியர் திரு. க. கிருபாகரனின் தனிப்பட்ட முயற்சியினாலும், உழைப்பினாலும் வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகையின் 25வது வெளியீட்டு விழா நிகழ்விலும்

17ம் பக்....

— இன்பம் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வயலற் சந்திரசேகரம்

**இரு குரவர்** - தாய், தந்தை
**இரு மரபு** - தாய் மரபு, தந்தை மரபு
**இரு சுடர்** - சூரியன், சந்திரன்
**இரு பற்று** - அகப்பற்று, புறப்பற்று
**இரு திணை** - உயர்திணை, அஃறிணை
**இரு மை** - இம்மை, மறுமை
**இரு நிதி** - சங்கநிதி, பதுமநிதி
**இரு பொருள்** - கல்வி, செல்வம்

---

**முக்கனி** - மா, பலா, வாழை
**முத்தமிழ்** - இயல், இசை, நாடகம்
**முத்தொழில்** - படைத்தல், காத்தல், அழித்தல்
**முப்பொறி** - மனம், வாக்கு, காயம்
**மும்மலங்கள்** - ஆணவம், கன்மம், மாயை
**மும்மூர்த்திகள்** - சிவன், பிரம்மா, விஷ்ணு
**முக் குற்றங்கள்** - காமம், வெகுளி, மயக்கம்
**முக்கடுகம்** - சுக்கு, மிளகு, திப்பிலி
**மூவுலகம்** - பூலோகம், பாதாளலோகம், வானுலகம்
**முச்சுடர்** - சூரியன், சந்திரன், அக்கினி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**நால்வகைப் பா** - ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, வெண்பா

**நால்வகைப் பூ** - கோட்டுப்பூ, கொடிப்பூ, நீலப்பூ, நீர்ப்பூ

**நாற் பொருள்** - அறம், பொருள், இன்பம், வீடு

**நாற் குணம்** - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு

**நாற் படை** - தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாற்படை

**நால் வர்ணத்தார்** - பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்

**ஐம்புலன்கள்** - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

**ஐங்குரவர்** - அரசன், ஆசிரியர், தாய், தந்தை, தமையன்

**ஐம்பொறி** - மெய், வாய், கண், மூக்கு, செவி

**ஐம்பூதம்** - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்

**ஐ நிலம்** - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

**ஐம்பால்** - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்

**ஐம்பெருங் காப்பியங்கள்** - சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி

**ஐஞ்சிறு காப்பியங்கள்** - சூளாமணி, உதயகுமார காவியம், நீலகேசி, நாககுமார காவியம், யசோதர காவியம்,

**பஞ்ச பாண்டவர்கள்** - தருமன், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன்

**பஞ்சலோகம்** - இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி

**பஞ்சாமிர்தம்** - சர்க்கரை, தயிர், தேன், நெய், பால்

**பஞ்சாயிதம்** - சக்கரம், சங்கு, தண்டு, தனு, வாள்

**பஞ்சாங்கம்** - கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வரம்

**பஞ்சமா பாதகம்**- கொலை, களவு, கள், சூது, காமம்

- தொடரும் ....

**இலக்கிய வீதி**

தனியொரு மனிதராக பல வேலைகளிலும் அவர் ஓடித் திரிந்ததைப் பார்க்கக் கஷ்டமாக இருந்தது. விழாவை மேலும் சிறப்பிக்க இன்னும் கொஞ்சம் திட்டமிட்டிருக்கலாமோ என்ற எண்ணம் தோன்றாமலில்லை.

எப்படி இருப்பினும் வாசிப்புப் பழக்கம் வீழ்ச்சி அடைந்துகொண்டிருக்கும் இக்காலத்தில் தனியொரு மனிதராக, ஆறு ஆண்டுகளாக ஒரு சஞ்சிகையைத் தயாரித்து வெளியிடும் அவரது அயராத முயற்சி, ஆர்வம் நாம் மிகவும் போற்றத்தக்கது. நமது மரியாதைக்குமுரியது! 'தென்றல்' வருங்காலங்களிலும் சுகமாக வீச நமது வாழ்த்துகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வீட்டு மருத்துவம்



# மன அழுத்தம் நோய்களுக்கான வாசல்

ஆனந்த சித்தன்

பரபரப்பும், அவசரமும், இரைச்சலு மிக்க இன்றைய வாழ்க்கை முறையில் அனைவருக்குள்ளும் உறைந்து மெது மெதுவாய் வளர்ந்து ஆட்டுவிப்பது மன அழுத்தம், மனச்சோர்வு போன்றவை. நவீன வாழ்க்கைமுறை தரும் வேண்டாத வினை இது. காலப்போக்கில் இது வளர்ந்து மனநோயாக மாற்றமடையும். அதுமட்டுமன்று மன அழுத்தம், தலையிடி, காய்ச்சல் என்று தொடங்கி வேறுபல நோய்களும் உருவாகக் காரணமாகலாம்.


மன அழுத்தம், மனச்சோர்வு போன்றவை ஏற்பட இன்றைய வாழ்க்கைமுறை பெரிதும் காரணமாகிறது. இன்று மனிதர்கள் தீவுகளாகி விட்டார்கள். மற்றவர்களோடு கொள்ளுகின்ற உறவு, ஒருவர் மற்றவர் மீது காட்டுகின்ற கரிசனை, அன்பு, பரிவு, உதவி, பாராட்டு, அரவணைப்பு என்பதெல்லாம் இன்று காணாமல் போய்விட்டன. அல்லது மிகவும் குறைந்துவிட்டன. இதனால், ஒவ்வொரு தனிமனிதரும் சுமக்க வேண்டிய பாரம் அதிகரித்துவிட்டது. இதனால், பல்வேறு நோய்கள், குறைபாடுகள், பிரச்சினைகள்.

மன அழுத்தம், தாம்பத்திய உறவு, கருத்தரித்தல் போன்றவற்றிலும் பிரச்சினைகளை உண்டாக்குகின்றன. ஆண் பால் வேறுபாட்டுக்குக் காரணமானதும், ஆண்களுக்குத் தனித்துவமானதுமான ஹார்மோன், டெஸ்டோஸ்டிரான். இது குறிப்பிட்ட செல்களிலிருந்து ஊற வேண்டும். ஆனால், இது மன அழுத்தத்தால் குறைவுபடுவதும், விந்தணு உற்பத்தியைக் குறைப்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பெண்களுக்கும் மன அழுத்தம் கருமுட்டை வெளியாவதிலும், கருத்தரிப்பதிலும் தாக்கங்களை உண்டாக்குகின்றன.

இத்தகைய பிரச்சினைகளுக்கு 'எள்' ஒரு நல்ல மருந்து. அத்துடன் உழுந்து, புழுங்கல் அரிசி என்பன எள்ளுடன் கலந்து களியாக, சோறாக, துவையலாக உண்பது ஓர் ஆரோக்கியமான உணவாகும்.

இன்று, ஆண்மையைப் பெருக்கும் ஆங்கில மருந்துகளில் பரவலாகச் சேர்க்கப்படும் L-ARGININE எனும் அமினோ அமிலமும் புரதமும் எள்ளில் அதிகளவில் உள்ளன. ஆண்கள் எள்ளை அடிக்கடி சாப்பிடலாம். உணவுமட்டும் பிரச்சினைகளைத் தீர்க்காது. மன அழுத்தத்தைத் தீர்க்க புரிதலும், பொறுமையும் வேண்டும்.

மன அழுத்தம், மனச் சோர்வு,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக்கண்ட

## மட்.மறைமாவட்ட குருமுதல்வர்

## அருள்தந்தை பிரான்சிஸ் சேவியர் டயஸ் அடிகள்

மட்டக்களப்பு மறைமாவட்ட குருமுதல்வர் அருள் தந்தை பிரான்சிஸ் சேவியர் டயஸ் அவர்கள் கடந்த மார்ச் திங்கள் 14ம் நாள் குருத்துவ வாழ்வில் இருபத்தியைந்து ஆண்டுகளை நிறைத்து வெள்ளிவிழாக் கண்டார். இதனை முன்னிட்டு ஏப்ரல் 26ம் நாள் தாண்டவன்வெளி முதியோர் இல்லத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆயர், குருக்கள் உட்பட பலரும் இத்திருப்பலியில் கலந்து கொண்டனர்.

தமது 25 ஆண்டுகள் குருத்துவப் பணி வாழ்வில் பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டவர் டயஸ் அடிகளார் என்பது இங்கே நினைவுகூரத்தக்கது.

இன்று பங்குகள் தோறும் உற்சாகமாகப் பணியாற் றிக் கொண்டிருக்கும் C.Y.A. என்று அழைக்கப்படும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் அடிகளாருடைய வழிகாட்டலில் தான் புதிதாக உருவாக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது.

அதுபோல், அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கச் செயற்பாடுகளும் அடிகளாருடைய பொறுப்பில் இருந்த காலத்தில் புதுவடிவும், உற்சாகமும் பெற்று செயற்படத் தொடங்கியதை மறந்துவிட முடியாது.

தொடர்ந்து மேற்படிப்புக்குச் சென்று திரும்பிய பின் மிகவும் சிக்கலான காலகட்டத்தில் திருகோணமலை மனித வள மேம்பாட்டு நிலைய (EHED) இயக்குநராக இருந்து, அகதிகள் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளில் நீண்டகாலமாக அரும்பணி ஆற்றியவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

குருத்துவ வாழ்வில் வெள்ளிவிழாக் கண்ட அடிகளார் இன்று மறைமாவட்ட குருமுதல்வராக பெரும்பணி ஆற்றிட நல்லருளும் இறை ஆசீரும் நிறைந்திட வேண்டுமென்று தொண்டன் நெஞ்சார வாழ்த்துகிறது.




– தொண்டன் –

*அது உருவாக்கும் நோய்கள் போன்றவற்றிலிருந்து வெளியேற யோகா, மூச்சுப் பயிற்சி, பிராணாயாமம் போன்றவை மிகவும் முக்கியமானது. யோகா, மூச்சுப் பயிற்சிகளில் ஈடுபடும்பொழுது உடலில் எதிர்ப்புச் சக்தி தூண்டப்படுவதும், மனச்சோர்வு, அரைகுறை உறக்கம் சீராவதும் மன அழுத்தத் தின் போது பெருகும் ஸ்ரெஸ் ஹார்மோன் குறைவதும் ஆராய்ச்சி செய்யப்பட் டுள்ளது. ஆகவே, தினமும் இவைகளைப் பயிற்சி செய்வது நமது மனதையும், வாழ்வையும் சீராக்கும்.*

*எல்லோருக்கும் ஒரு கடந்தகாலம் இருக்கும். அப்படிக் கடந்தவை நம் 'நாளையைக் கட்டமைப்பதில் பெரும் பங்கு வகிக்கும். வாழ்வில் இப்படிக் கடந்து போன ஏக்கமும், நேசமும், கோபமும், வலியும் வாழ்வின் பல பரிமாணங்களைக் காட்டி மன எழுச்சியைத் தரும். இவைகளைக் கடக்காமல் பணம், பதவி, சொத்து என்று ஓடிக்கொண்டிருக்க முடியாது.*

*மன எழுச்சிக்கான, புது வாழ்வுக்கான வித்துகளை மீட்டெடுப்பது அவசியமானதாகும்.* ■

வாசகர்களே! சென்ற இதழில் வெளிவந்த "இஸ்ராயேல்" என்னும் கட்டுரையை எழுதியவர் "அருட்சகோதரர் S.A.I. மத்தியூ அவர்களாவர். பெயர் விடுபட்டமைக்காக வருந்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"அமைதியை
ஏற்படுத்துவோர்
பேறு பெற்றோர்"

# அமைதியின் ஊற்று



இன்று, எல்லோரும் மன அமைதியையே விரும்புகின்றனர். தொழில் நெருக்கடியில் இருப்போரும், வீட்டில் பிள்ளைகளை வளர்ப்போரும் தேர்வுக்குத் தயாரிப்போரும் ஏன் எல்லாவிதமான மனிதரும் மன அமைதியைத் தேடுகின்றனர். ஆனால், நம்மில் பலர் அமைதியை விட அழுத்தத்தையே அனுபவிக்கின்றோம்.

இன்றைய உலகில் அழுத்தம் பரவிக் கொண்டே செல்கிறது. உடலிலே, உள்ளத்திலே, உறவுகளிலே பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. உண்மையான அமைதி ஒரு கொடையாகும். இதை நாம் முதலில் கடவுளிடமிருந்துதான் பெற்றுக்கொள்ள முடியும். இயேசு கொடுக்கும் அமைதி இந்த உலகம் கொடுக்கும் அமைதியைப் போன்றதல்ல. காரணம், இந்த உலகம் தரக்கூடிய அமைதி விரைவில் மாறக்கூடியது, காலத்திற்கு உட்பட்டது. இறைவன் அளிக்கும் அமைதி சூழ்நிலையைச் சார்ந்தது அல்ல. ஏனெனில் கஷ்ரமான சூழ்நிலையிலும் சலனம் இன்றி நிம்மதியாக இருக்க கடவுளின் அமைதி அருளுகின்றது.

அடுத்து, நம் மனதின் எண்ண அலைகளை உணர்ந்து, ஆழ்ந்து தியானிக்கும்போது, இந்த உணர்வு அமைதியை அளிக்கும். நாம் பிறரோடு ஒற்றுமையாக வாழும்போது அமைதி பிறக்கின்றது. மனப் போராட்டங்கள் குறைகின்றன. மேலும், மனிதனின் தவறுகள் மன அமைதியைக் குலைக்கின்றன. இறைவன் நம் பாவங்களை மன்னிப்பதுபோல, நாமும் மற்றவர்களின் குறைகளை, பாவத்தை மன்னிக்கும் போதும் அமைதி பிறக்கின்றது.

இறைவனிடம் நம் பாவத்தை அறிக்கையிடும் போது நீதியுள்ள, நம்பிக்கைக்குரியவர் அமைதியை வழங்குகின்றார். இறை பிரசன்னத்தை உணரும்போதும் அதில் நாம் வாழும்போதும் இறை அமைதியை நாம் உய்த்துணர முடியும்.

நீ உலகத்தை
நோக்கினால்
அது உனக்குத்
தொந்தரவு
அளிக்கும்.
உன்னை உற்றுப்
பார்த்தால் நீ மிகவும்
சோர்வு அடைவாய்.
ஆனால், கிறிஸ்துவையே நோக்கி
னால் மன அமைதி அடைவாய்.
அவர் நம்மைக் கைவிடமாட்டார்,
நம்மை விட்டு விலகவும் மாட்டார்.

எனவே, இன்றைய உலகிற்கு அமைதி தேவை என்றால், அந்த அமைதி இயேசுவிடமிருந்து தான் வரவேண்டும். அவர்தான் அமைதியின் ஊற்று. அவரது பிறப்பிலும் அமைதி அறிவிக்கப்படுகின்றது; போதனையிலும் அமைதியின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்படுகின்றது. ஏன், இறப்பிலும், உயிர்ப்பிலும் இயேசு அமைதியை வழங்கினார். இந்த அமைதி யாருக்கு...? ஆம், இயேசுவின் ஆவி தரும் அமைதி உலகம் முழுமைக்கும். எங்கெங்கு வன்முறைகள், அநீதிகள், பழமைவாதங்கள், போராட்டங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் ஆண்டவர் தரும் அமைதி எடுத்துச்செல்லப்பட வேண்டும் என்றுதான் இயேசு தன் சீடர்களுக்குக் கட்டளை பிறப்பித்தார். இந்த அமைதியை சமுதாயத்திற்கு வழங்க வேண்டியது நமது கடமை. அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றவர்கள்.

- தொடர் 24ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊருக்குப் போயிருந்தேன்...

- பைந்தமிழ்க் குமரன் டேவிட் -

நானும் நண்பர்களும்
நாவல் மரமேறி
கிளைமுறியக்கீழ் விழுந்த நாள்
குரங்குக் கூட்டத்தை
குந்தவிடாது கலைக்க
வலசன் குரங்கு வந்து
நண்பன் கால் கடித்தநாள்
இதயத்தாளில் இன்னமும்
இனிமைகளாய் ....

ஆங்காங்கே சில ஓட்டுவீடுகள்
உயர்ந்து நிற்க
அந்நிய மண்ணின் சம்பாத்தியத்தில்
உறுமிச் செல்லும் உந்துருளிகள்
ஆயினும் தூண்டில் கம்புகளும்,
மண்புழுச் சிரட்டைகளும்
மாறவேயில்லை

கிளிசறி வேலியும் கிறவல்
பாதைகளும்
புல் மண்டிய ஆற்றங்கரைப்
படித்துறையும்
பழஞ்சோற்றுப் பானைகளும்
மாற்றமற்ற செல்வங்களாய் .....

பிஞ்சுக் குழந்தையையும்
பிரியமுள்ள மனைவியையும்
மறந்துபோய்
மெழுகுவர்த்தியாகி
நான் கட்டியெழுப்பிய கல்விக்கூடம் ...

ஒருகாலை மாடுகள்போல்
உள்ளன மனங்களும்
கற்றவரைக் காமுறாத
கயமைப் போக்கதும்
இன்னமும் நிலையாய் .....

மூப்பு வந்து முட்டி மோத
செபமாலை கையிலேற
மாற்றமுற்ற மனிதர் சிலர்
உள்ளத்தளவில் உணர்வற்ற
கட்டைகளாய்
உலவுகின்ற மனிதர் பலர்
ஊருக்குப் போயிருந்தேன்
ஊரிருந்த நிலமையிது.....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




கடந்த இதழ் தொடர் ...

**1628 இன் உரிமைக்கான விண்ணப்பம் (Petition of rights):**

1628 இல் முதலாம் சார்ள்ஸ் மன்னனுக்கு, குடி மக்கள் சுதந்திரம்பற்றி இங்கிலாந்து பாராளுமன்றத்தால் அனுப்பிவைக்கப்பட்ட ஆவணம் இதுவாகும். 'மக்னா கார்ட்டா' வையடுத்து குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தாக்கத்தை மனித உரிமைகள் அபிவிருத்தியில் உருவாக்கிய மைல் கல்லாக இதைக் கருதுகிறார்கள். மன்னனது தாறுமாறான வெளி நாட்டுக் கொள்கைக்கு ஏற்ப நிதிவழங்க பாராளுமன்றம் மறுத்தபோது, தனது அரசுரிமை கொண்டு பலாத்காரமாகக் கடன் பெற்றுக் கொள்ளல், நிதிக்கட்டுப்பாட்டு நடவடிக்கை என்று தனது துருப்புகளை மக்கள் வீடுகளில் தங்க வைத்தல், இந்த கொள்கைகளுக்கெதிராக நடப்பவர்களைக் கைதுசெய்தல், தடுத்து வைத்தல் போன்றவற்றிற்கெதிராக சார்ள்ஸ் மன்னனுக்கும், பக்கிங்காம் சிற்றரசன் ஜோர்ஜ் வில்லியர்சிக்கும் எதிராக பாராளுமன்றத்தில் உருவான எதிர்ப்பலையே இந்த ஆவணத்தைத் தயாரிக்க வழிகோலியது. இதை உருவாக்கிய எட்வர்ட் கோக் பிரபு, இதில் ஏலவே இருந்த சட்டங்களின் அடிப்படையில், பிரதான நான்கு அம்சங்களை உள்ளடக்கி வைத்தார். அதில் ஒன்று, பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வரி வசூலிக்கக் கூடாது. மற்றையது, காரணம் கூறப்படாது எவரும் கைது செய்யப்படக் கூடாது. அடுத்தது, குடிமக்கள் இல்லங்களில் துருப்புகளைத் தங்கச் செய்தல் கூடாது. மேலும், சமாதான சூழலில் அவசரகாலச் சட்டம் (Marshal Law) அமுல் செய்யப்படக்கூடாது என்பவையேயாகும்.

**1789 இல் அறிமுகமான அமெரிக்க அரசியலமைப்பு (US Constitution):**

தொமஸ் ஜெபர்சன் கைப்பட உருவாக்கியதுதான் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம். 1776 ஆடி 04இல் அமெரிக்க ஐக்கிய இராச்சிய காங்கிரஸ் சுதந்திரப் பிரகடனத்தை அங்கீகரித்தது.

அமெரிக்கா இனி முதற்கொண்டு பிரித்தானியாவின் ஆட்சிக்குட்பட்டிராது என்றும், அதில் அடங்கும் 18 மாநிலங்களும் பிரிட்டிஷ் இராச்சியத்திட்குட்பட்டவைகள் அல்ல என்றும் ஒரு விளக்கவுரையை வழங்கினார் ஜெபர்சன். அமெரிக்க மக்கள் அனைவரும் வாசித்தறியக்கூடிய வகையில் அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் விநியோகிக்கப்பட்டது. அதில் தனி மனிதச் சுதந்திரம் மற்றும் புரட்சியிலீடுபடும் உரிமை என்பன அடங்கியிருந்தன. அமெரிக்கர்களால் பெரிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போற்றப்பட்ட இந்த அம்சங்கள் பின்னர் ஏனைய நாடுகளாலும் சருவதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப் பட்டன. இது பிரெஞ்சுப் புரட்சியிலும் ஆதிக்கம் செலுத்தியது என்று கூற முடியும்.

**1787 அமெரிக்க அரசியல மைப்பும் 1791 அமெரிக்கா நிறைவேற்றிய உரிமைகள் சட்டமும்:**
(US Bill of Rights):




பொதுவாகச் சொல்வதானால், இவையிரண்டும் அமெரிக்க குடி மக்களின் அடிப்படை உரிமைக ளைப் பாதுகாக்கின்றன.

1787 கோடைகாலத்தின்போது, அமெரிக்காவின் பிலடெல்பியா மாநிலத்தில் உருவாக்கப்பட்ட அரசி யலமைப்புத்தான் அமெரிக்காவின் சமஷ்டி ஆட்சிமுறைக்கான அடிப் படைச் சட்டமாக அமைவதுடன், மேலை நாடுகளின் சட்டவாக்கங்க ளுக்கான ஒரு கால்கோலாகவும் இருக்கின்றது. உலகத்தின் பழமையான தேசிய அரசியல மைப்பாக இருக்கின்ற இது, அரசாங்கத்தின் பிரதான கூறுக ளையும் அவற்றின் தொழிற்பாடுக ளையும் வரையறை செய்வதுடன், அந்நாட்டுக் குடி மக்களின் அடிப் படை உரிமைகள் பற்றியும் நமக்கு எடுத்துக் கூறுகிறது.

அதனுடைய முதல் பத்துத் திருத்தங்கள் - உரிமைகள் சட்டம் -1791 டிசெம்பர் 15ந் திகதி அறிமுக மாக்கப்பட்டு, சமஷ்டி அரசுகளின் அதிகாரத்தைக் குறைப்பதன் மூலம், நாட்டின் அனைத்துக் குடி மக்களதும், அமெரிக்காவில் வாழ் கின்றவர்களதும், அங்கு விஜயம் செய்கின்றவர்களதும் உரிமைக ளைப் பாதுகாக்கின்றது. உரிமை கள் சட்டமானது, பேச்சுச் சுதந்தி ரம், மதச் சுதந்திரம், சுடுகலன் களை வைத்திருக்கவும், பயன் படுத்துவதற்குமான உரிமை, ஒன்றுகூடும் சுதந்திரம், விண்ணப் பிக்கின்ற சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்கின்றது. அது நியாய மற்ற தேடுதல், கைப்பற்றுதல், குரூரமான, வழக்கத்திலில்லாத தண்டனை வழங்குதல் மற்றும் வலோத்காரமாக தனிநபரைத் தனிமைப்படுத்துதல் ஆகிய வற்றைத் தவிர்க்கும்படி வலியுறுத் துகின்றது.

அது வழங்கும் சட்டரீதியான பாதுகாப்புக்கு மேலதிகமாக, உரிமைகள் சட்டம் முறையான சட்ட நடவடிக்கைகளுக்கூடாக வன்றி சமயத்தை நிறுவுவதற்கு எதிராகக் கூட அமெரிக்க காங்கி ரஸ் சட்டங்களை உருவாக்குவ தைத் தடுக்கின்றது. அது மாத்திர மல்லாது, சமஷ்டி அரசுகள் ஒரு நபரது வாழ்வுரிமை, சுதந்திரம், அல்லது சொத்துகளைக் களைவ தையும் தடுத்து நிற்கின்றது.

சமஷ்டி குற்றவியல் வழக்குக ளில் பெரிய தண்டனைக்குரிய மற்றும் பிரபலமற்ற குற்றங்களுக்கு எல்லாம் அந்தக் குற்றங்கள் நடை பெற்ற மாநிலத்திலேயே விரைவான தும் யூரி சபையினரது முன்னிலை யிலானதுமான விசாரணைகளை வலியுறுத்துகின்றது.

**1789 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட பிரான்சின் மனிதனதும் குடிமக்களதும் உரிமைகள் பிரகடனம் :**
( French Declaration of the Rights of Man and of the Citizen):



1789 இல் இடம்பெற்ற பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் 'கடைசி விருப்பு ஆவணமொன்றின் வெளிப் பாடு' என்ற அடிப்படையில், மனித னதும் குடிமக்களதும் உரிமைகள் மீதான பிரகடனம் ஒடுக்கப்படுவ தினின்றும் குறித்த சுதந்திரங் களை வழங்கியது.

1789இலே பிரான்சு தேசத்து மக்கள் தனி அரசுரிமை ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்ததுடன் பிரெஞ்சு குடியரசுக்கான அடித் தளத்தையும் இட்டனர். பஸ்டில்லே சதுக்கத்தை முற்றுகையிட்டு ஆறு வாரங்களாகியிருந்த நிலையில், பிரபுத்துவ ஆதிக்கம் முறியடிக்கப் பட்டு மூன்று வாரங்களே கழிந்த நிலையில், மனிதனதும் குடிமக்க ளதும் உரிமைகள் பிரகடனமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




நந்தமிழின் இனிமையினைச் சொன்னாருண்டு
நாவினிக்கப் பாடிமனம் மகிழ்ந்தாருண்டு
எந்தமிழைச் சொந்தமக்கள் மறந்துசெல்லும் நிலைகண்டு
வெந்துமனம் நோகுதடா இன்று. - மலர் -

னது, பிரான்ஸ் குடியரசின் அரசியலமைப்பை வரை வதற்கான முதலும் முன்னோடியுமான நடவடிக்கையாக பிரெஞ்சு அரசியலமைப்பு மன்றத்தால் ஏற்கப்பட்டது.

இப்பிரகடனம், அனைத்துக் குடி மக்களுக்குமான "சுதந்திரம், சொத்து, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்வதாகப் பறைசாற்றியது. அது சட்டத்திற்கான தேவையானது, 'தனிமனிதனது இயல்பான சுதந்திரம் அடுத்தவனுக்கான அதே உரிமைவரை எல்லை கொண்டுள்ளது' என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே எழுகின்றது என்று வாதாடியது. இவ்வாறாக சட்டம் என்பது, 'இந்த சமவுரிமையை நிலைநாட்டவும், மனித வர்க்கத்திற்கு முரணானது என இனங்காணப்படும் நடவடிக்கைகளை மட்டும் தடுப்பதற்குமான பொதுவான உறுதிப்பாடு' என இந்தப் பிரகடனம் வலியுறுத்தி நின்றது.

அதாவது இதன்படி சட்டம் என்பது, மனிதனுக்கான உரிமை சகலருக்கும் சமமான தென்பதை உறுதிப்படுத்தவும், மனிதனுக்கு எதிரான அல்லது அவனது உரிமைக்கெதிரான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் ஒன்றாகவும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுங்குமுறை என்றாகிறது.

மேலே நாம் கண்ட சாசனங்களும், பிரகடனங்களும் சட்டவாக்கங்களும் இன்றைய மனித உரிமைச் சாசனங்களுக்கு முன்னோடிகளாகும் எனக் கொள்ள முடியும்.

நாம் இன்று நம் நாட்டுச் சூழலின் எதிரொலியாக அடிக்கடி கேள்விப்படும் ஒரு சாராருக்கு அச்சுறுத்தலையும், இன்னுமொரு சாராருக்கு ஓரளவு மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் சொல் 'ஜெனிவா சாசனம்' என்பதாகும்.

என்ன இந்த ஜெனிவா சாசனம்?
ஜெனிவா சாசனம் பற்றி ஒழுங்கு முறையில் பார்ப்பது இதை விளங்கிக் கொள்ள உதவியாயிருக்கும்.

தொடரும்

**அமைதி வாழ்வு ......**

எனவே, அமைதியை ஏற்படுத்துவதற்கான வழி என்ன? நாம் பகிர்ந்து வாழும்போது, வேற்றுமைகள், ஏற்றத் தாழ்வுகளை அகற்றி, எல்லோரும் சகோதரர்கள் என்ற நிலையை உருவாக்கி, சமத்துவத்தைப் பேணும்போது அமைதி தானாக ஏற்படும்.

இறுதியாக, கடவுள் தருகின்ற அமைதிக்காக மன்றாடுவோம், அதைப் பெறுவோம். வாழ்வில் செயற்படுவோம். அறிவெல்லாம் கடந்த இறை அமைதி நம் உள்ளத்தையும் மனதையும் நிரப்பட்டும்.

என்று சமநீதி கெடுகின்றதோ, என்று பகிர்வு இல்லையோ, என்று ஏற்றத் தாழ்வுகள், வேற்றுமைகள் பெருகி, ஒருவர் அடுத்தவரை வெல்ல வேண்டும், அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற நிலை ஏற்படுகின்றதோ அதுவே அமைதிக்கு ஆபத்தாக முடியும்; போர்களும், பிரச்சினைகளும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

கடந்த மார்ச் மாதம் 27ம் திகதி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா முதற் தடவையாக திருத்தந்தையைச் சந்தித்தார். ஏறத்தாள 52 நிமிடங்கள் வரை இடம்பெற்ற இச்சந்திப்பின் இறுதியில் அமெரிக்காவுக்கு வருகை தருமாறு திருத்தந்தைக்கு அழைப்பு விடுத்தார் அமெரிக்க அதிபர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**ஆனி 02ம் திகதி : புனித மார்சலினசும் பீற்றரும்**



*304*ம் வருடம் டயக்கிளேசியன் மன்னனின் காலத்தில் நிகழ்ந்த வேதகலாபனையின்போது உரோம் நகரில் தீய ஆவிகளை விரட்டும் குருக்களான மார்சலினஸ், பீற்றர் ஆகிய இருவர் இருந்தனர். இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுச் சிறையிலிடப்பட்டனர். அங்கு அவர்கள் சமீபத்தில் மறையை ஏற்றுக்கொண்டிருந்த பிரமாணிக்கமுள்ள புதிய கிறிஸ்தவர்களால் அக்கறையுடன் பாதுகாக்கப்பட்டார்கள். இவர்களில் முக்கியமானவர்கள் சிறைக் காப்பாளர் ஆர்த்திமியஸ், அவர் மனைவி, அவர்களது மகள் ஆகியோராகும். இவர்களனைவருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது. மார்சலினசும், பீற்றரும் "சில்வா நிக்ரா" என அழைக்கப்பட்ட ஒரு காட்டுப் பகுதிக்குள் கொண்டுசெல்லப்பட்டு இரகசியமாகச் சிரச்சேதம் செய்யப்பட்டதால், இவர்கள் அடக்கஞ் செய்யப்பட்ட இடங்களை அறியமுடியாமற் போனது. ஆனால், ஆரம்பத்தில் அவர்களின் பெயர்கள் மறைந்திருந்தாலும், இறையருளால் உரோமைய விதிகளில் இடைச்செருகல் செய்யப்பட்டு திருப்பலியில் பல நூற்றாண்டுகளுக்கு மேலாக அழியாமல் நிலை நின்றன. இவர்களைப் படுகொலை செய்த கொலைகாரன் ஒரு கிறிஸ்தவனாக மாறினான் என அறிந்த பரிசுத்த பாப்பிறை டமாசுஸ் இருவரது கல்லறைகட்கான வசனங்களை இயற்றினார். புனிதர்களாகப் பிரகடனமும் செய்தார்.

**ஆனி 03ம் திகதி : புனித சாள்ஸ் லுவாங்காவும் தோழர்களும்**



மத்திய ஆபிரிக்காவிலுள்ள உகண்டா தேச மன்னன் மெசா, தன் நாட்டில் நல்ல பயன்களைப் பெற்றுத் தந்த வெள்ளைக்காரக் குருக்களை விசுவாசப் போதனை செய்ய அனுமதித்தான். எப்படியாயினும் இந்நிலைமை நீடிக்க முடியவில்லை. 1885ம் வருடம் இவரை வென்ற அரசன் முவாங்கா அரசுரிமையைக் கைப்பற்றினான். "செபிக்கும் அனைவரும் சித்திரவதை செய்யப்படட்டும்" எனக் கட்டளையிட்டான். இத்தகைய சித்திரவதைக் காலப்பகுதியில் அரண்மனை வேலையாட்களின் தலைவன் சாள்ஸ் லுவாங்காவும், அவரது இருபத்தொரு தோழரும் அங்கிருந்தனர். அவர்களது தலைவன் என்ற ரீதியில் தனது வார்த்தைகளால் ஏனையோரைத் தேற்றினார் சாள்ஸ் லுவாங்கா. அவர்களை ஆறுதல்படுத்தியதுடன் மட்டுமல்லாது, தானே உதாரணமாக இருந்து மரணத்தைத் தழுவினார். அவர் உயிருடன் தீக்கிரையாக்கப்பட்டார். அதே தினத்தில் அவர்களில் பன்னிரெண்டு பேரும் கொல்லப்பட்டனர். இது நடந்தது 1886ம் வருடம் ஆனி மூன்றாம் நாளில் ஆகும். ஏனையோர் 1887ம் வருடம் தை மாதம் இருபத்தேழாந் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் கொல்லப்பட்டனர். இயேசுக்கிறிஸ்துவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தங்கத் தமிழ்


தமிழ்பேசத் தெரியாத தமிழ்க் குழந்தைகளைத்
தமிழ் நாட்டிலேயே உருவாக்கத்
தொடங்கிவிட்டோம்.

எங்கும் இல்லை தமிழ்
எதிலும் இல்லை தமிழ்
இது நிகழ்தமிழ் வாழ்வியலின் மெய்நிலை

முதல்மொழி கண்டவர் முந்தா நாள்வரை
கை நாட்டு
கையெழுத்துக்குப் பிறகே
காணாமற் போனது தமிழ்

'தமிழ் சோறு போடுமா?'
- ஓர் அரங்கில் கேட்கப்பட்ட கேள்வி

'தமிழ் ... தமிழ்....' என்கிறீர்களே
தமிழை வைத்துக்கொண்டு
நாற்பத்தைந்து கல்கூடத்
தாண்ட முடியாது....
ஒரு மேடையில் அண்மையில் கேட்ட பேச்சு



- அறிவுமதி

இவற்றின் இடையிலேதான்
இன்னும் பிழைத்திருக்கிறது 'சங்கத் தமிழ்'
எனும் தங்கத் தமிழ்

உலக உயிர்கள் அனைத்திற்குமான
மூலிகை வைப்பகமாகத்
தப்பித்திருக்கிறது அது....
எழுதப்பட்டு தொலைக்கப்பட்டு
கண்டெடுக்கப்பட்டு
கல்விப் பாடங்களில் மட்டுமே
மதிப்பெண்களுக்காக மதிக்கப்பட்டு ...

'அகர முதல' தெரியும்
'யாதும் ஊரே.....' தெரியும்
அப்புறம் என்ன தெரியும் ....'.

தமிழின் சிறப்பு என்ன?
தமிழினத்துக்கான விழுமியங்கள் என்னென்ன...?
எந்தக் குழந்தைக்கும் விரல்விட்டுச் சொல்ல
எதுவும் இல்லை
குறிப்பாகத் தாய்த்தமிழ் நாட்டில்
இல்லை

அமெரிக்காவில் ...... அனைத்துலகப்
புறநானூற்று
மாநாட்டில்
ஆங்கிலவழிக் கல்வியில் படிக்கும்
தமிழ்ச் சிறுவர் சிறுமிகள்
புறநானூற்றுப் பாடல்களில் கேட்கப்படும்
அத்தனை விநாடி வினாக்களுக்கும்
போட்டி போட்டுக்கொண்டு
விடையளிக்கிறார்கள்.

இந்த முயற்சியை இங்கும்
புலம்பெயர்ந்த எங்கும்
இன்னும் விரிவு செய்ய
வெற்றி செய்ய
என்ன வழி?

மறைசாட்சிகளான இவர்கள் 1920ம் வருடம் முத்திப்பேறுபெற்ற நிலைக்கு உயர்த்தப்பட்டு 1964ம் வருடம் பரிசுத்த பாப்பிறை 6ம் சின்னப்பரால் புனிதர்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டனர். அந்தத் தினத்தில் பாப்பரசர் "இந்த ஆபிரிக்க மறைசாட்சிகள் ஒரு புதிய யுகத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர், இவர்கள் இரத்தத்தால் கழுவப்பட்டு ஆபிரிக்கா மீட்படைந்து சுதந்திரம் பெறப் போகிறது, ஆபிரிக்கா கிறிஸ்தவத்தைக் கேட்கத் தயாராகிவிட்டது, இறைவனின் இரகசியத் திட்டத்தை நாம் விரைவில் காணமுடியும், இறைவன் ஆபிரிக்காவுக்குச் சரியானதொரு அழைப்பைத் தந்துள்ளார். அத்துடன் வரலாற்றைத் தூய்மைப்படுத்தும் ஒரு வாக்குறுதியையும் தந்துள்ளார். ஆபிரிக்கா கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஒரு புதிய நாடாகும். ஆபிரிக்காவின் இந்தக் கிறிஸ்தவ இளைஞர்களின் எளிமை, அசையாத விசுவாசம் ஆகியவற்றின் மூலம் தெளிவான சாட்சிகளாகியுள்ளனர் என்று கூறினார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 30.06.2014

பரிசுப் போட்டி

# விவிலியம் கற்போம் - 132

**யோசுவா : 11:1-23**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆட்சோர் மன்னன் யாபின் இதைக் கேள்வியுற்று மாதோன் மன்னன் யோபாபுக்கும், சிம்ரோன் மன்னனுக்கும், அக்சாபு மன்னனுக்கும் ஆளனுப்பினான். மலைப் பகுதியின் வடக்கிலும் கினரேத்துக்குத் தெற்கில் அராபாவிலும், சமவெளிப் பகுதிகளிலும் மேற்கே ........................ இருந்த மன்னர்களுக்கும், கிழக்கிலும் மேற்கிலும் இருந்த கானானியர், எமோரியர், இத்தியர், பெரிசியர், மலைவாழ் எபூசியர், மிஸ்பா நாட்டில் எர்மோனின் அடிவாரத்தில் இருந்த இவ்வியர் ஆகியோர்க்கும் ஆளனுப்பினான். அவர்களும், படைகளும், எண்ணிறைந்த மக்களும் குதிரைகளும் ........................ சென்றன. அனைவரும் ஒன்றாக மேரோம் நீரோடைக் கரையில் இஸ்ரயேலருடன் போரிடப் பாளையம் இறங்கினர். ஆண்டவர் யோசுவாவிடம், "அவர்கள் முன் அஞ்சாதே, ஏனெனில் நாளை இந்நேரம் அனைவரையும் உயிரற்றவர்களாய் இஸ்ரயேல் முன் ஒப்படைப்பேன். அவர்கள் குதிரைகளின் ........................ நரம்புகளை நீ வெட்டுவாய். தேர்களைத் தீக்கிரையாக்குவாய்" என்றார். யோசுவாவும், எல்லா வீரரும் திடீரென மேரோம் நீரோடைக்கருகில் வந்து அவர்களைத் தாக்கினார்கள். ஆண்டவர் அவர்களை இஸ்ரயேலரிடம் ஒப்படைக்க அவர்கள் அவர்களைக் கொன்றனர். அவர்களைச் சீதோன் வரையிலும் ........................ வரையிலும், கிழக்கில் மிஸ்பே பள்ளத்தாக்குவரை, எவரும் தப்பிவிடாதவாறு தாக்கினர். ஆண்டவர் சொன்னபடியே யோசுவா செய்தார். குதிரைகளின் குதிகால் நரம்புகளை வெட்டினார். தேர்களைத் தீக்கிரையாக்கினார். இச்சமயம் யோசுவா ஆட்சோரைக் கைப்பற்றினார். அதன் மன்னனை வாளால் தாக்கினார். ஏனெனில், ........................ அந்த அரசுகள் அனைத்திற்கும் தலைமை தாங்கி வந்தது. இஸ்ரயேலர் அந்நகரில் இருந்த உயிர்கள் அனைத்தையும் வாள்முனையில் அடியோடு அழித்தனர். ஆட்சோரைத் தீக்கிரையாக்கினர். யோசுவா அந்த எல்லா நகர்களையும், மன்னர்களையும் கைப்பற்றினார். ........................ ஊழியர் மோசே கட்டளையிட்டிருந்தபடி அவர்களைக் கொன்றார். மேட்டுப் பகுதியில் நிறுவப்பட்ட நகர்களை இஸ்ரயேல் மக்கள் எரிக்கவில்லை. யோசுவா ஆட்சோரை மட்டும் எரித்தார். அங்கு கைப்பற்றிய பொருட்களையும், கால்நடைகளையும் இஸ்ரயேலர் கொள்ளைப் பொருளாகக் கொண்டனர். மனிதர்களை ........................ . தம் ஊழியர் மோசேக்கு ஆண்டவர் கட்டளையிட்டபடி, மோசே யோசுவாவுக்குக் கட்டளையிட்டிருந்தார். யோசுவா அப்படியே ஒன்றுவிடாமல் செய்தார். எல்லா நாடுகளையும், மலைகளையும் நெகேபு அனைத்தையும், ........................ நாடு முழுவதையும், சமவெளிப் பகுதிகளையும், அராபாவையும், இஸ்ரயேல் மலைகளையும், அதன் சமவெளிகளையும் கைப்பற்றினார். ஆலாக்கு மலையிலிருந்து சேயீர் வரை உயர்ந்து செல்லும் எர்மோன் மலைக்குக் கீழ் லெபனோன் பள்ளத்தாக்கில் உள்ள பாகால் காதுவரையிருந்த பகுதிகளைக் கைப்பற்றி, அவற்றின் அரசர்களைக் கொன்றார். ........................ குடிமக்களான இவ்வியரைத் தவிர வேறெவரும் இஸ்ரயேலருடன் நல்லுறவு கொள்ளவில்லை. இச்சமயம் யோசுவா சென்று, மலை நாடு, எபிரோன், தெபீர், அனாபு, யூதாவின் அனைத்து மலைப்பகுதிகள், இஸ்ரயேலின் மலைப்பகுதிகள் ஆகியவற்றிலிருந்த ........................ அழித்தார். அவர்கள் காசா, காத்து, அஸ்தோது ஆகிய இடங்களில் மட்டுமே எஞ்சியிருந்தனர். ஆண்டவர் கூறியபடி யோசுவா எல்லா நிலத்தையும் கைப்பற்றினார்.

| | |
|---|---|
| **விடைகள்:** | **குதிகால், ஆண்டவரின், கொன்றனர், கோசேன், கியயோன், மிஸ்ரபோத்துமையும் அனாக்கியரை, ஆட்சோர், தேர்களும், நாபோத்தேரில்** |

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 132

## பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. தன்னைத்தானே சுற்றும் பூமியின் சுழற்சி வேகம் மணிக்கு ......
*(66,700 மைல் - 70,000 மைல் - 65,000 மைல்)*

2. இலங்கையின் தேசிய விளையாட்டு
(கால்பந்தாட்டம் - கரப்பந்தாட்டம் - கபடி)

3. தாயின் கருவறையில் முதலில் உருவாகும் உறுப்பு
(மூளை - சுவாசப்பை - இதயம்)

4. 'தமிழ்க் காவலர்' என்று போற்றப்படுபவர்
(கி.ஆ.பே. விஸ்வநாதம் - அறிஞர் அண்ணா - மறைமலை அடிகள்)

5. 'எறும்பூர ........................'
(தோல் சிவக்கும் - கல்லும் தேயும் - வழியும் தோன்றும்)

6. வல்லெழுத்து மிகும் சொல்
(அத்தனை - அவ்வளவு - மற்று)

பெயர் : ..............................................................................

முகவரி: ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 132**
**தொண்டன்**
**அ. பெ. எண் – 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 130 விடைகள்

யோசுவாவுடனும், காய்ந்த, கடவுளின், எமோரிய, அப்பம்,
கிபயோன், கெபிரா, வாக்குறுதி, அருகில்

## அறிவை வளர்ப்போம் - 130 விடைகள்

1. திரிகடுகம் 2. ஆறு 3. பைதகரஸ்
4. 1980 5. இந்தியா 6. பூமியாள்வார்

**பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்**

- வ. சுஜானி
  இல. 02, எல்லை வீதி,
  மட்டக்களப்பு.

* (முகவரி தெளிவில்லை. சரியான முகவரியை எழுதி அனுப்பவும்)

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுவோர்**

- லெனின் ஸ்டெபன் சவீன்
  இல. 72/12A, ஞானசூரியம் சதுக்கம்
  மட்டக்களப்பு.
- கி. ரா. விஜுன்
  செங்குந்தர் வீதி,
  ஆரையம்பதி.
- சாமித்தம்பி சிறிகாந்தினி
  சம்மனசுகளின் ஆலயம்,
  திருமலை வீதி, மாங்கேணி.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 82 முடிவுகள்**

- **முதலாம் பரிசு - 400/=**
  டெஸ்மன் அபிஷேக்
  கணேஸ்குமார்,
  இல. 59/01, கதிர்காமர் வீதி,
  அமிர்தகழி,
  மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  வினிஸ்ரா அன்ராடோ,
  இல. 18, 2ம் குறுக்கு,
  இருதயபுரம் மேற்கு,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  J. சபிறுத்னி
  , y .11/9A, ஏரன்ஸ்
  ஒழுங்கை,
  தாண்டவன்வெளி,
  மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ – ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

